உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கூடலை யாற்றூர்ப் புராணம்.

இது

சிதம்பரத்தைச் சார்ந்த கலியமலை வித்வான்

ந. சந்திரசேகர நாயக்கர் அவர்களால்

இயற்றப்பட்டு,

சூரியனார்கோவில் ஆதீனத்தைச் சார்ந்தவரும், திருக்கூடலை யாற்றூர்

வாசியுமாகிய தருமநல்லூர்

சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளால்

சிதம்பரம் ஸ்ரீ குஞ்சிதசரண அச்சியந்திரசாலையில்

1 முதல் 72 பக்கம வரையிலும்,

சென்னை ஜூபிடர்பிரஸ்ஸில்

மற்ற பக்கங்களும் சிறப்புப் பாயிரங்களும்,

பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்புரிமை

1934.

MAHAMAHOPADHYAYA DR. U. V. SWAMINATHA IYER LIBRARY MADRAS-1
சென்னை-1

முகவுரை.

புண்ணிய பூமியாகிய பாதகண்டத்து நடுநாட்டுத் திருப்பதிகளில் மூர்த்தி, தலம், தீர்த்த மென்னும் முத்திறத்தானுஞ் சிறப்புற்றுச், சைவசமயக்குரவராய ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருப்பதிகம் பெற்றுத்திகழும் திருக்கூடலை யாற்றூர் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தின் மகிமையை யாவருமறிந்து ஈடேறுவான் வடமொழியினின்றும் திருவாளர், பாளையங்கோட்டை - சரவணைப்பிள்ளை யவர்களாலும், பேரூர்-கிருஷ்ணப்பிள்ளை யவர்களாலும், திருக்கூடலையாற்றூர்-கோயில் - மணியம் - நல்ல சிவன்பிள்ளை யவர்களும் பொருட் செலவிட்டு முயற்சித்து மொழிபெயர்க்கப்பட்ட கத்திய ரூபமான திருக்கூடலையாற்றூர்ப் புராணத்தை அச்சிடுவித்துச் சென்ற ஆங்கீரச வருடம் ஆடிமாதத்தில் (20-7-1932) வெளியிட்டுள்ளேன்.

அப்புராணம் செய்யுள்வடிவாக வெளிவரவேண்டு மென்னும் அவாவினால் யான் ஷை நல்ல சிவன்பிள்ளை யவர்கள், காவலன் குடி திருவாளர்- இரத்தினபடையாட்சி யவர்களுடன் கூடி விரும்பிய வண்ணம் கலியமலை-வித்துவான் ந. சந்திரசேகர நாயகரவர்கள் மேற்கண்ட மொழிபெயர்ப்புடன்-ஷை கோயில் புதிய திருப்பணியியற்றியவர்களும், தருமவிசாரணைத் தலைவருமான திருவாளர்-தேவகோட்டை, சத்திரம்-ராம-அரு-அரு-ராம அருணாசலஞ் செட்டிரவர்கள் புதிதாக மொழிபெயர்த்துள்ள மொழிபெயர்ப்புக் கிணங்க இந்நூலை இயற்றித் தந்தார்கள். இவர்கள் வைணவ மரபினராகவிருந்தும், இத்தலத்தில் மிகப் பற்றுதலுடைமையான் எங்களுடைய மனப்பான்மைக் கிணங்கப் பொதுநோக்கால் இயற்றித்தந்த இவ்வுதவிக்கு யாங்களே யன்றிச் சைவாபிமானிகள் பலரும் நன்றிசெலுத்துங் கடப்பாடுடையவர்களேயாம்.

இந்நூல் அச்சிடுவதற்குப் பொருள் உதவிசெய்த திருவாளர் ஷை செட்டியார் அவர்களுடையவும், கூடலையாற்றூர், காவலன்குடி முதலிய பல கிராமங்களிலுமுள்ள சைவாபிமானமுடைய வேளாண் மரபினருடையவும், வன்னிகுல க்ஷத்திரிய மரபினருடையவும் ஆன பேருதவி எழுமையும் மறக்கற்பால தன்று.

யான் மேற்கொண்ட இத்தகைய பெருஞ்செயலைத் தோன்றாத் துணையாயிருந்து முற்றுவிததருளிய ஸ்ரீ நிருத்தனவல்லபேசுரருடைய பெருங்கருணையைச் சிந்தித்து வந்திக்கின்றனன்.

திருக்கூடலையாற்றூர்.
3—6—34.
பவ ௵ வைகாசி ௴ 21 ௳.

திருக்கூடலை யாற்றூரில் வசிக்கும்
சூரியனார் கோவில் ஆதீனத்
தைச் சார்ந்தவராய

தருமநல்லூர் சுவாமிநாத தம்பிரான்.

விஷய அட்டவணை.

எண்-பக்கஎண்.

முகவுரை.

1. திருக்கூடலையாற்றூர் தேவாரம்.
2. திருக்கூடலையாற்றூர் திருப்புகழ்
3. சிறப்புப்பாயிரங்கள்.

நூல்.

1. பாயிரப் படலம்.
4. நைமிசப் படலம்.
9. தலமகிமைப் படலம்.
14. அரி அயன் அடி முடி தேடு படலம்.
26. திரிவேணிப் படலம்.
40. பிரமன் வரம்பெறு படலம்.
45. நந்தி வரம்பெறு படலம்.
49. திரு நிருத்தனப் படலம்.
62. அகத்தியர் வரம்பெறு படலம்.
67. காத்தியாயனர் வரம்பெறு படலம்.
71. திருமால் திருமணம்புரி படலம்.
76. தீர்த்தமகிமைப் படலம்.

சிவமயம்.

திருக்கூடலையாற்றூர் தேவாரம்.

சுந்தரமூர்த்தி நாயனார்.

பண்—புறநீர்மை.

திருச்சிற்றம்பலம்.

வடிவுடை மழுவேந்தி மதகரி யுரிபோர்த்துப்
பொடியணி திருமேனிப் புரிகுழ லுமையோடுங்
கொடியணி நெடுமாடக் கூடலை யாற்றூரி
லடிகளிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௧)

வையக முழுதுண்ட மாலொடு நான்முகனும்
பையிள வரவல்குற் பாவையொ டும்முடனே
கொய்யணி மலர்ச்சோலைக் கூடலை யாற்றூரி
லையனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௨)

ஊர்தொறும் வெண்டலைகொண் டுண்பலி யிடுமென்று
வார்தரு மென்முலையாண் மங்கையொ டும்முடனே
கூர்நுனை மழுவேந்திக் கூடலை யாற்றூரி
லார்வனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௩)

சந்தண வும்புனலுந் தாங்கிய தாழ்சடையன்
பந்தண வும்விரலாள் பாவையொ டும்முடனே
கொந்தண வும்பொழில்சூழ் கூடலை யாற்றூரி
லந்தணனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௪)

வேதியர் விண்ணவரு மண்ணவருந் தொழநற்
சோதிய துருவாகிச் சுரிகுழ லுமையோடுங்
கோதிய வண்டறையுங் கூடலை யாற்றூரி
லாதியிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௫)

வித்தக வீணையொடும் வெண்புரி நூல்பூண்டு
முத்தன வெண்முறுவன் மங்கையொ டும்முடனே
கொத்தல ரும்பொழில்சூழ் கூடலை யாற்றூரி
லத்தனிவ் வழிபோந்த வதிசய மறியேனே (௬)

மழைநுழை மதியமொடு வாளர வஞ்சடைமை
விழைநுழை துகிலல்கு லேந்திழையா ளோடுங்
குழையணி திகழ்சோலைக் கூடலை யாற்றூரி
லழகனிவ் வழிபோந்த வதிசய மறியேனே (௭)

மறைமுதல் வானவரும் மாலய னிந்திரனும்
பிறைநுதன் மங்கையொடும் பேய்க்கண முஞ்சூழக்
குறல்படை யதனோடுங் கூடலை யாற்றூரி
லறவனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௮)

வேலையி னஞ்சுண்டு விடையது தானேறிப்
பாலன மென்மொழியால் பாவையோ டும்முடனே
கோலம துருவாகிக் கூடலை யாற்றூரி
லாலனிவ் வழிபோந்த வதிசய மறியேனே. (௯)

கூடலை யாற்றூரிற் கொடியிடை யவளோடு
மாட லுகந்தானை யதிசய மிதுவென்று
நாடிய வின்றமிழா னாவல வூரன்சொற்
பாடல்கள் பத்தும்வல்லார் தம்வினை பற்றறுமே. (௰)

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

திருக்கூடலையாற்றூர் திருப்புகழ்.

தாத்ததனத் தாந்ததன தானதன தானதன
தாத்ததனத் தாந்ததன தானதன தானதன
தாத்ததனத் தாந்ததன தானதன தானதன தந்ததான

வாட்டியெனைச் சூழ்ந்தவினை யாசையமு வாசையனல்
மூட்டியுலைக் காய்ந்தமழு வாமெனவி காசமொடு
மாட்டியனைப்பாய்ந்துகட வோடட மொடாடிவிடு விஞ்சையாலே;

வாய்த்தமலர்ச் சாந்துபுழு கானபனி நீர்களொடு
காற்றுவரத் தாங்குவன மார்பிலணி யாரமொடு
வாய்க்குமெனப் பூண்டழக தாகபவி சோடுமகிழ் வன்புகூறத்;

நீட்டுவிழிக் காந்திமட வார்களுட னாடிவலை
பூட்டிவிடப் போந்துபிணி யோடுவலி வாதமென
சேர்த்துவிடப் பேர்ந்துவினை மூடியடி யேனுமுன தன்பிலாமல்;
தேட்டமுறத் தேர்ந்துமமர் தாமெனவே யேகிநம
னோட்டிவிடக் காய்ந்துவரி வேதனடை யாளமருள்
சீட்டுவரக் காண்டுகளி காலனணுகா நின்று ளன்புதாராய்
வேட்டுவரைக் காய்ந்துகுற மாதையுற வாடியிருள்
நாட்டவரைச் சேர்ந்தகதிர் வேல்கொடம ராடிசிறை
மீட்டமரர்க் காண்டவனை வாழ்கநிலை யாகவைகும் விஞ்ஞையோனே
வேற்றுருவிற் போந்துமது ராபுரியி லாடிவைகை
யாற்றின்மணற் றூங்குமழு வாளியென தாதைபுர
மேட்டையெரித் தாண்டசிவ லோகன்விடை யேறியிட முங்
கோட்டுமுலைத் தாங்குமிமை யானஇடை கொடிமதி ||கொளாயி;
தோற்றமெனப் போந்தஅழ காசிவ காமிவிறல்
கூற்றுவனைக் காய்ந்தஅபி ராமமென தாரஅருள் கந்தவேளே ;
கூட்டுநதித் தேங்கியவெ ளாறுதர ளாறுதிகழ்
நாட்டிலுரைச் சேர்ந்தமயிலாவளி தெய்வானையொடு
கூற்றுவிழத் தாண்டியென தாகமதில் வாழ்குமர தம்பிரானே.
திருச்சிற்றம்பலம்.

சிறப்புப் பாயிரங்கள்.

சிதம்பரம் ஜோதி ஆஸ்ரமம
ஸ்ரீலஸ்ரீ நீலகண்ட சிவம் அவர்கள் இயற்றியது-
தரவுக் கொச்சகக்கலிப்பா.

பொன்பூத்த விதழிநதிபுனைசந்தரசேகரனார்
மின்பூத்த கான்மாறி மேவுறவாடிய வதனாற்
கொன்பூத்த தலங்களினுங் குலவுமதுரைத்தலமே
மன்பூத்த வேற்றமிகமருவுறச்செய்தததினும். 1.

சீர்கொண்ட தில்லைமிகச் சிறப்புடையதெனத் தெரிக்க
நேர்கொண்ட வன்பரது நிலவுதிருப்பா வெழுதி
யேர்கொண்ட வதினுமிக வெழிலுறுகூடலை யாற்றூர்ப்
பேர்கொண்ட தலமிகவும் பெருமையுறச் செய்வதற்கே. 2.

குறைவிலா வப்பதிக்குங் கூறுபுராணம் மதிலாக்
குறையொன்றுளது போலக் குலவிடச் செய்தக்குறையை
மறைவுறச் செய்வகையதனுன் மகிழ்கலிய மலையூரிற்
கறைமதியாதியகரந்து கலியுகத்திற் கேற்புடைத்தாய். 3.

சந்தேகி யாவண்ணஞ் சந்திரசேகரப்பெயரால்
வந்தேதம் முற்றறிவு மறைத்தொன்று மறியார்போற்
சந்தமுறு மைவநல்லூர்த் தமிழ்வித்துவானுருஞ்
சிந்தைமகிழ் மறையவராஞ் சீனிவாசையரையே. 4.

கொண்டுதம தாரியராக் குறைவில்கலை கற்பவர்போன்
றண்டியிருந் தரியகலை யனைத்தினையுங் கற்றறிந்து
பண்டுளவக் குறைநீக்கப் பகருங்கூடலை யாற்றூர்த்
தண்டமிழ்நற புராணமது தாம்பாடித் தாம்பொறித்தார். 5.

பரம்பரனே பாடுடும் பரமபுராணத்தினிலே
திரம்பெறவே குறைகாட்டுந் தீரருண்டோதி கழுலகி
னிரம்புமதின் வனப்பனைத்து நிகழ்த்தியிடு நிபுணருண்டோ
சிரம்பெறுமந்நூல் கர்த்தா சிறந்தென்றும் வாழியவே. 6.

திருப்பாதிரிப்புலியூர் பண்டித
ஸ்ரீமதி அசலாம்பிகையம்மாள் இயற்றியது-

விடையாட்சி கொண்டவரன் கூடலையாற்றூர்ச் சரிதம்
வியன்சீரின்பத்
தொடையாட்சி யருந்தமிழ்க் காப்பியமாகத்தொடுத்திட்டான்
தொழுழுவேந்தர்
படையாட்சிப் பரம்பரையோன் கலியமலை நல்லதம்பிப்
பெயரோன் பண்பார்
நடையாட்சி யுறுமகவா யுதித்தறிவோ டொழுக்கமிவை
நயந்திட்டானே. 1.

செந்தமிழ் தேரைவநல்லூர் திகழ் ஸ்ரீநிவாஸனெனுந்
திருப்போர்பூண்ட
அந்தணனும் பண்டிதர்பா லருங்கலைதேர் மாணவனு
யமைநதோன்பன்னூல்
சந்தமுறப் புனைந்தளிக்குஞ் சந்திரசேகரப் புலவன்
றருசீரோடு
மெந்தவளமும் பெருகிப் பல்லாண்டு பெருவாழ்வி
லிலகமாதோ. 2.

கும்பகோணம். நேடிவ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்
மா. ஐவநல்லூர்
பிரம்மஸ்ரீ. பி. ஸ்ரீநிவாஸய்யர் அவர்கள்.
இயற்றியது.

ஆசிரியப்பா.

மலர்தலை யுலகிற் குயிரெனச் சிறந்தே
யுலகெலாம் போற்றுமுயர் வின்விளங் குறூஉம்
பெண்ணொருபாகன் பெரும்பதி பலவுள
மெண்ணுறவிளங்கு மின்பதியெது வெனின்
நடுநாடென்ன நவின்றிடு மாயிடைக்
கடுவிசைநீர்மலி கவின்வெள்ளாறொடு
மணிமுத்தாறு மணக் குமிடந்தனி
லணிமிகத் திகழ்வதூஉ மன்றெம்மானூர்
வலிந்தாட்கொண்ட வன்றொண்டரைக்கூஉய்
நலிந்திடு வினைதவிர் நற்றமிழ்ப்பதிகம்
பாடுவித்தேற்றருள் பழம்பதி யாயதூஉங்
கூடலையாற்றூரென்னுங் குறிபெறு
நற்பதியென்ப நவிலு மப்பதியி
னற்புதமெல்லா மவனி யோருணர
வடமொழி நூலின் வகுத்தன கொண்டீண்
டிடங்கொள் செந்தமிழி னின்னிசைப்பாக்களால்
கற்றவர் புகழப் பாடினன் மற்றவன்
சிற்றம்பலமாஞ் சிதம்பரப் பதிக்குக்
குடபாலமைந்து கோதறக் குலவிடுங்
கலியமலை யெனு மூரான்மலி சீர்
வன்னி வானவன் வழிவருந்தவத்தா
னன்னய மிக்க நல்லதம்பியின்சேய்
பெரியாரைப் போற்றும் பெருமதி படைத்தோன்
கரிவரதன் றாள் கருதுருகுணத்தா
னன்புமடக்கமு மாற்றவும் பெற்றான்
மன்புகழ் மனைவிமக்களை யுடையான்
சந்த்ர சேகரனெனஞ் சாற்றுறு பெயரான்
மந்திரந் தேர்ந்து மக்கட் குதவுவோ

னாதியாந்தமிழை யாதரித் தவனாய்
மனாதிகளாலே வளர்தொண்டு புரிவோ
னின்னபண்பாள னியற்றிய விந்நூல்
தன்னோடு மென்றுந் தாவிலாவிருமைச்
செல்வமும் பெற்றுச் சீர்மிக வாழ்ந்திடும்
நல்வரந் தந்திட நம்பனா மிறைவன்
செழுமல ரடிகளைத் தினமுந்
தொழுதேத்திடுவன் றூய்மையோ டெனவே.

கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

பிரம்மஸ்ரீ ஊ- ச. வேங்கடராம ஐயர் அவர்கள் இயற்றியது.

பாடறியா ராகியில்லை பரமனென்றே
பகருமவர் தெளிந்துபரம் பொருளைநாடிக்
கூடமுயன் றிடச்செயலே செய்கை யென்னக்
குறித்துமிகத் துணிந்துபவருங் குலையத்தீமை
யோடவருள் புரியானொ ருவனைமிக் கூர்ந்
துறைந்துகதி யளித்துவளர்ந் தோங்குசீர்சால்
கூடலையாற்றூர்ப் பழமைவிரித்து முன்னோர்
கூறுமுத னூறுணர்ந்துட் கொண்டுவந்தே. 1.

வந்தவருக் கினியதமிழ் வளங்களெல்லா
மன்னுறச் செய்தருள் சீனிவாசமேலோன்
றந்தமுறை யாய்ந்துபல நூல்கள் கற்றோன்
றகவுடையோர் சிந்தையினு ளிருக்கத்தக்கோன்
முந்தொருவீரன் மகிழ்ந்து கல்வித்தொட்ட
மூலையெனுங் கலியமலைப் பதியில் வந்தோன்
சந்திரசே கரனியற்றித் தந்தானிந்நூல்
தாரணியிற் றூரணமாத் தழைத்துவாழி. 2.

வித்யாவிசாரணைத் தலைவராயிருந்தவரும், புதுக்கோட்டை மகாராஜா அவர்கள் ஆசிரியரா யிருந்தவரும். தமிழ்ப் பண்டிதரும், 'பொயட் லாரெட்' (Poet Laureate) என்னும் பட்டம் பெற்றவருமாகிய, பலகலைவித்வான் திருவாளர் R. உலகநாதபிள்ளை அவர்கள் இயற்றியது.

வெண்பா.

கூடலை யாற்றூர்ப் புராணத்தைக் கூறுபுகழ்
றுடலையாற்றூர்ப் புக்க தன்மையால்—பீடலையா
ரிந்திர சேகரன்றுளெய்தவரு ளெய்தினன்
சந்திரசேகர மால்தான். 1.

தொல்லரசர் தொல்குடியிற் றேன்றலால் தொல்லுலகில்
நல்லரச நற்றமிழான் நாட்டினன்—சொல்லரசப்
பேர்ச்சந்த்ர சேகரமால் பெட்புறாஉங் கூடலையாற்
றூர்ப்புராணத்தை யாய்ந்துற்று.

அறுசீர் ஆசிரியவிருத்தம்

ஒருதலத்தின் புராணத்தை யுரைத்தலானுலகமதி
லோங்கு மேலா
மிருதலத்தின் புராணத்தை யுரைத்தபய னெய்திறு
னென்றும் நீங்காக்
கருதலத்தின் புராணத்தைக் கட்டறுத்தான் கூடலை
யாற்றூ ரெனும்பேர்ப்
பெருதலத்தின் புராணதனை யுரைத்த சந்த்ரசேகரனும்
பேர்மிக்கோனே.

புதுக்கோட்டை சமஸ்தானம் மாட்சிமிக்க மகாராஜா அவர்கள்
தமிழாசிரியர் பண்டித
திருவாளர் T. O. நடராஜபிள்ளை அவர்கள் இயற்றியது

உலகெலாம் போற்றுமுயர்தனிச் சைவ
மொளிர்தரவுஞற்றிடு முரவோன்
அலகினற் குணங்களமைவுறீ இவாழ்வோ
னம்புவி மகடிருமுகமாம்

நலமலிகலியு மலைவளர் நல்ல
தம்பியினற்ற வத்துதித்தோன்
புலமிகு சந்த்ர சேகரனெனும் பேர்
புனைந்தவன் புகழ்பெறு புனிதன்

திருவளர் மருமத்தொருவனுமயனும்
திருவடி திருமுடி காண்டற்
கருமுரு வுறுதற்பர நிருத்தனவல்
லபனவர் கூடலையாற்றூர்ப்
பெருமிசை தனையா வருமினிதுணர்வான்
பிறங்கற நெறிவிளக்கிடு பூட
மருவுறு தமிழானுறுமழகியாவு
மருவ நன்கியற்றினன் மாதோ.

தெற்கு. விருதாங்கன். விதத்துவான்

திருவாளர். ந. சுப்பராயப்பிள்ளை அவர்கள் இயற்றியது.

உலகெலாம் பரசுமொருதனிக் கடவுளுருற்றுதன் னிச்சையின்மல்கி
யிலகுறும்வாசப் புதுநறுவிரியுமெழின்மரை யாசனத்திறைவ
னலகிலாவகையி னளித்தபல்புவனத் தணிகிளர்நாவலம்பெயரிற்
பொலிதருபொழிலின் வளமெமாற்புகலுந்தரத்தோ புலவர்க்குமரிதால். 1.

அன்னதன்வளமே தென்னிலொன்றறைவ லருமறைதெளிவருமம்மான்
றன்னடிபழிச்சித் தவிர்விலாச்சித்திசார்தர வுயிர்களுறப்பவித்துத்
துன்னுமவ்வீட்டின் றொடர்ச்சிபெற்றுய்தல் சொலப்படு மவனியிலிவனே
யின்னதல்லாத விடமெல்லாம்போகத்தினிதிருந்தருந்தி மீண்டுறலே. 2.

ஆதலிலிறைவன்றனக்கென வகுத்தவவயவ மிலாதுளவினைத்து
மோதுதன்வயமா வியங்கலவ்வினையிர் பிறவினையேற்று தல்வலனுய்
பூதபௌதிகமாய்ப் பொலிவுறுவான்றன் பொன்னடி சார்வுறுவார்தம்
போதமல்கியதெவ்வவ் வுருவாகிப்பொருந்துவ னென்பர்நூற்புலவர். 3.

வணங்குபல்துறையுள் வர்சநற்கொன்றை வனைந்திள் மதிநதிசூடி
யிணங்குபல் சிரமாமாலைகொண்டெஞ் சுமின்றென்ற கறிகுறியாகிக்
கணங்கொளுமைந்து முகத்தினிலினிது காட்டுமைநதொழின் முறைநடாத்து
மணங்குடைமுக்கண் வடிவினிற்றிகழுமச் சிவன்றிருமன்த்தமர்த்தி. 4.

நீற்றினாற்பொலியும் புண்டாமிலக நின்மலன் றனைத்தி யானித்துச்
சாற்றுமைந்தெழுத்தாற் சார்குநற்தமக்குச் சார்துணையாகிநற்சைவ
மேற்றபேர்ச்சமயத் தீசனென்றிலங்க விலிங்கநல்லுருவினிலினிது
போற்றுவார்போற்றப் புவியினிற்பலவாந் தலங்களிற்பொலிகுவான்புனிதன். 5

அப்பலதலங்கட் கொருதிலகமதா யணிகிளர்ந்தரு நெறிதருதற்
கொப்பலபிறவென்றே திடக்கங்கையொளிர் கலைமகளிலக்குமியே
திப்பியமாகநதி யுருவாகிச்சேர்ந்து தோய்வார் வினைசிதைத்துமச்
செப்பிடவரலாற் கூடலையாற்றூ ரெனும்பெயர் சிவணுறுமம். 6.

ஒருதலமதுவே யுமையொருபாகத் தொருவனீர்ந்தன் கமலத்து
வருபவன்முதலோர் வழுத்திடப் பஞ்சகிருத்தியமா நடம்பயின்று
பொருவிலா நிருத்தவல்லப னெனப்பேர் புனைந்து கூய்ச்சுந்தரற்பணிகொள்
கருதரு செயல்செய்தலமதன் சிறப்பைக் கழறினன்றமிழ்க்கவியதனில் 7.

எவனெனிலறைவா மியலுமப்பதியி னெழிலுறு வன்னியின்றிக்கிற்
பவனமாயப் பொலியுங் கலியமலைப் பேர்ப்பதியுளான்பதுமைகேள்வன்றன்
கவனவெட்டெழுத்தைக் கருத்தினிலிருத்திக் காசறவிளங்குவானவனுஞ்
சிவனும் வேறென்பார்தமை மதிக்கல்லான் சேரிடமறிந்துசேர் தக்கான். 8.

தாவறுநல்லதம்பி நாமத்தான் றவப்பயனாலடைந் துலகின்
மேவுறுசீர்த் தியைவநல்லூரின் மிளிருமந்தணர் குலதிலகன்
பாவுறு நூல்கள் பல்கிலாதோர்ந்து பயனொடு கெழீஇ வழியொழுகு
மோவறு குணங்கொள் சீநிவாசன்றானுன்னி நற்பல்கலை யுணர்ந்தான். 9

சாற்றுநட்பென்பதிவ்வியற் றென்னச் சகங்கொள வென்னொடு மருவி
யூற்றமிக்கூர வொளிருவான் பிறர்க்கோரூறு கண்டுழி மனமுருதா
னேற்றமா தவத்தான் சந்திரசேகரனென்றியம்பு நாமத்தினாலிவர்வா
ன்ற்றல்சால் புகழோ டவனியிலூழி வாழிய வன்னவன் மாதோ. 10

சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலைத் தமிழாசிரியர்
திருவாளர், அவர்கள்
சு. பொன்னோதுவார் இயற்றிய சிறப்புப்பாயிரம்

கூடலை வாலிக் கலியம லைப்பதி கூறிடமாக்
கூடலை மேவிய சந்திர சேகரன் குணமிக்கான்
கூடலை யான்பதத் தன்பமை நாவலன் கூர்மதியாற்
கூடலை யாற்றூர்ப் புராணமதிந்நாட் கூறினனால்.

சிறப்புப்பாயிரங்கள்

இராமநாதபுரம் சமஸ்தானவித்துவானும், சிதம்பரம், அண்ணாமலை
சர்வகலாசாலைத் தமிழாசிரியருமாகிய

திருவாளர் சர்க்கரை இராமசாமிப் புலவர் அவர்கள் இயற்றியது.

பரவையிடை யிரவினிடைத் தூதுவிட்டோர் முதுகுன்றப்
பதிக்குச் செல்லுஞ்
சுரம்வினவ வேதியராய்த் தோன்றிநின்று கூடலையாற்
றூர்க்குச் செல்லும்
பெருவழியென் றுரைத்துமுன்செல் பெருமான் செந்தமிழ்ப்பாவிற்
பிரிய னென்றைந்
தருவுலகத் தமுதுகைப்பச் சாலமுள புராணநன்கு
சாற்றி னால். 1

வண்டிசைக்குத் தேன்பரிசில் வழங்குபொழில் சூழ்கலிய
மலையில் வாழ்வோன்
தெண்டிரைசூழ் மண்டலத்திற் சிறந்ததமிழ் வாணருக்கோர்
திலகம் போல்வான்
எண்டிசையுங் கொண்டாடுங் கூடலையாற் றூரானை
யென்றும் போற்றுங்
கண்டனைய மொழிபுகல்வோன் சந்திரசேகரமதுர
கவிஞ ரேறே. 2.

பரமபதி துணை.

திருக்கூடலையாற்றூர்ப் புராணம்.

(0)

விநாயகர் துதி.

திங்கண் மா நதிசேர் திருவேணியன்
றங்கூடலையாற்றின் றகைசொலப்
பொங்குமுக்கட்புகர்முகவைங்கரன்
றுங்கமாமலர்த்தாடலைசூடுவாம்.

க. பாயிரப்படலம்.

நிருத்தனவல்லபர்.

அருவாகியுருவாகி யருவுருவாயைந்தொழிலுமரிதினாற்றி
மருவாகிமருமனைந்தமலராகிமன்னியவெப்பொருளுமாகிக்
குருவாகிக்கோணகிக்கூடலையாற்றூர தனிற்குனிக்குநாதன்
றிருவாருமலர்க்கழலைச்சிந்தித்துநமதுபவத்திருக்கைவீழ்ப்பாம்.

ஞானபராசத்திகள்.

புலனைந்துமகத்தடக்கிப்புரிகின்றதவமறையோர்புலருமுள்ளத்
தலமைந்துபெறத்தங்குந்தனிவிளக்கையுலகமெலாந்தயங்கவீன்ற
வலமுந்துபுரமெரித்தவள்ளலிடப்பாகத்தில்வயங்கித்தோன்று
நலமந்தமிகந்தருளுஞானபராசத்திகளைநயந்துவாழ்வாம். (உ)

சபாபதி.

மால்தூக்கிற்கிசைமுழவுவலிக்கமரைமலரோனுமகிழ்ந்துபோற்ற
நூல்தூக்குமிருமுனிவர்பணிந்தருளைநுகர்ந்தருகேநோக்கிநிற்கச்
சேல்தூக்குவிழிமாதுபங்கிருந்துசேவிக்கச்செழியமன்றில்
கால்தூக்கிநடம்புரியுங்கண்ணுதலெம்பெருமானைக்கருதிவாழ்வாம்

தக்ஷிணாமூர்த்தி.

இலகுமறைப்பொருடேருமியன்முனிவர்நால்வர்களுமிறைஞ்சியேத்தி
யலகிடுதற்கரியபரம்பொருளானதனைமற்றங்கவர்கடேறிப்

புலமவிரக்கல்லாலின்புடையமர்ந்துதீக்கைசெயும்புனிதமூர்த்தி
நலமவிருந்தாண்மலரைநமதுளத்திலெந்நாளுநலக்கவைப்பாம். (௪)

அமுதவிநாயகர்.

எல்லாநீயாளுமென்றியம்புமறையந்தமெனவிறைஞ்சித்தாதை
வில்லாருங்கழல்வலமாய்விரைந்துபுகூஉமாங்கனியைவிரும்பியேற்றுச்
சொல்லாருங்கவுட்கொண்டசுவையமுதகுஞ்சரன்றன்சோதித்தாள்க
ளெல்லாரும்வினைத்தொழுவமகற்றிநமதருநெஞ்சமணிந்துவாழ்க()

சுப்பிரமணியர்.

ஓங்குமறைப்பொருடேருயுலகாற்றுந்தொழிலுனக்கிங்கொல்லாதென்னத்
தேங்குலவுமலரோனைச்சிறையிருத்தித்தேவர்கடஞ்சிறையைமீட்ட
பாங்குலவுபச்சைமயின்மீதாரும்பன்னிருதோட்பகவன்செய்ய
வீங்குமரைத்தாளிரண்டும்வியனுளத்திலெந்நாளும்விரிகமாதோ. (௫)

இலக்குமி.

சீர்த்துளவமாலைபுனைசெம்மலருமார்பகத்திற்சிவணித்தன்னை
நீர்த்தவழிபாடுபுரிநெறியுடையார்தமக்குற்றநெகிழ்வைப்போக்கி
யார்த்தவருஞ்செல்வமெலாமளித்தம்மைக்கழியாதவார்வமுத்தி
யோர்த்தருளுமன்னைதனதொளிமலர்த்தாணமதுரத்திலொளிரவைப்பாம்

கலைமகள்.

அடியாரென்றடைந்தவரையரசருடன்சமனரியாதனத்தில்வைக்குங்
கடியாரும்வெண்சலசக்கலைமகடனிருபாதக்கமலம்போந்தென்
வடிவாருநாவின்மிசைவைகிவளம்பெருக்கிவழூஉக்களைந்தசொல்லால்
கொடியாருங்கூடலையாற்றூர்மகிமையெல்லவையுங்குணிக்குமாதோ. (௮)

திருநந்திதேவர்.

சிந்தனைக்கெட்டாத்தேவன்றிருவருட்சிறக்கவேண்டி
பந்திகொள்வானநாடர்பணிந்தனர்போற்றிசெய்ய
வந்தனர்தம்மையாண்டுவரன்முறைநிறுத்தவல்ல
நந்தியெம்பெருமான்பாதநறுமலர்கொண்டுவாழ்வாம். (௯)

திருஞானசம்பந்தர்.

கடிகமழ்கூந்தற்செவ்வாய்கண்ணுதல்பாகங்கொண்ட
துடியிடைகலசக்கொங்கைசுரந்தருளமுதமுண்டு
படிதனிற்சைவமோங்கப்பைந்தமிழ்மறையைக்கோத்த
கொடியணிகாழிஞானக்குரிசிலைவணக்கஞ்செய்வாம். (௧௦)

திருநாவுக்கரசர்.

அஞ்சிடத்தெவ்வரெல்லாமைந்தெழுத்தடைவினுன்னி
துஞ்சிடவருத்துநஞ்சைத்தூயநல்லமுதாக்கொண்டும்
வெஞ்சினக்களிற்றைவென்றும்வேலைநீர்படிந்தெழுந்து
முஞ்சவரடிகளன்றிபுறுதுணையில்லைவேறே. (௧௧)

சுந்தரமூர்த்தி.

சென்றநாளடிமையென்னச்செப்புமிவ்வோலையென்றே
மன்றலைமறித்தாட்கொண்டமாதொருபாகன்றன்னைக்
கன்றியபரவைமாட்டுக்காரிருளியாமந்தன்னி
னின்றணித்தூதுசெல்லவேவினானிணைத்தாள்போற்றி. (௧௨)

மாணிக்கவாசகர்.

போதமாம்புலத்திற்புக்குப்பொய்மலிவாழ்வையெள்ளித்
தீதிலாச்சிவாநுபூதிச்செல்வராய்த்திகழ்ந்துநாளு
மாதரம்பெருகப்பாடியாடிகண்ணருவிமூழ்கும்
வாதவூரடிகளென்னும்வள்ளருள்வழுத்துவாமே. (௧௩)

சண்டேசுரரும் மற்றை நாயன்மார்களும்.

தாதைதாளெறிந்துநித்தன்றன்னடிச்சோதிதங்குங்
காதலன்றானுமற்றைக்கரிசறுமறைநூலெல்லா
மோதிடுமனையுள்ளும்புறம்புமாயொளிரக்காணுங்
கோதறுதொண்டர்தாளுங்குயிற்றுதுநமதுநெஞ்சின். (௧௪)

நூல்வந்தவழியும் அது உரைத்தற்குக் காரணமும்.

பண்ணினன்மொழிப்பங்கினனந்திபாலளித்த
வெண்ணினூற்பொருளியற்சனற்குமரனங்கேற்று
அண்ணல்வியாதனுக்கருத்தினனன்னவன்சூதற்
குண்ணலம்பெறவுரைத்தருள்புரிந்தனனுலகில். (௧௫)

செப்புமப்பெருநூல்களிற்சிவரகசியத்துட்
டிப்பியம்மெனத்திகழ்திரிவேணியின்மகிமை
யிப்புவிக்கணேயாவருமெளிதினினுணர
வொப்பறும்வடசொல்லினின்றுயர்தமிழ்ப்பாவால். (௧௬)

தேவபாடையிற்றெளிவுளாருரைவழுவாம
லாவன்மிக்குளேனவர்பதஞ்சிரமிசையேற்று

ஓவிலாதுயிர்தொறுமவிரான்கதையதனாற்
றுவிலாதுரைத்திடத்தமியேனுளங்கொண்டேன். (௧௭)

அவையடக்கம்.

சாற்றுதொல்வினைச்சழக்கெலாமழித்தருள்புரியு
நீற்றுமேனியனிலவுறுதலத்தினதெழிலை
யேற்றவின்றமிழ்ப்பாவினாலியற்றுவான்புகுமென்
னாற்றலின்னதென்றறிந்திலனார்வமேயுடையேன். (௧௮)

ஆதலாலளியேனறியாதுரைநூற்க
ணேதமேகலித்தியங்கிடற்கையமேயில்லை
போதமிக்கவர்புகுந்துறுமன்னதைப்போக்கி
யோதுறுங்குணமுளவழியுவந்தெனையாள்க. (௧௯)

குருவணக்கம்.

புன்புலத்திழியலென்றன்புலத்தினைக்கழுவியன்பாற்
றன்புலமளித்துக்காக்குந்தகவுறுமைவநல்லூர்
மன்புலமவிரவாழுமறையவன்சீநிவாசக்
கொன்புரிதவத்தோனன்றகுரைகழல்வாழ்கமாதோ. (௨௰)

பாயிரப்படலமுற்றும்.

௨. நைமிசப்படலம்.

வானமூசிமீப்படர் குவலெனும் வரையுளவாந்
தானவேழவெண்மருப்பொடுதலைதபணிவான்றித்
தேனையீட்டுசந்தகில்பலதிரைக்கரத்தெறியுஞ்
சானவித்தடத்துளதரோநைமிசாரணியம். (௧)

நிலத்தின்வாதனைநீற்றிடுநீணெறியுய்க்குந்
தலத்தின்மிக்கதுதவந்தவாத்தவப்பயனளிக்குங்
குலத்தின்மிக்கதோர்குலந்தருங்கோற்றொடிப்பாக
னலத்தினெல்லையினாட்டிடுநைமிசக்கானம். (௨)

கலையவாவியகாட்சியர்கரிசறவாற்றுந்
தலையவாவியவேள்வியிற்றணிபுணுப்பருகி

நிலையவாவியநெஞ்சுடைவானவர்நிவக்கு
மிலையவாவியவெழிலுடைநைமிசப்புறவம். (௩)

வையமீதுளதாயினும்வானவர்தருவைத்
துய்யவிண்பதந்துகளறுத்தீந்திடனினக்குச்
செய்யவாகுமோசெப்பெனச்சினைகளாங்கரத்தால்
நையவேசுறல்போலுமாநைமிசக்காடு. (௪)

உருவிலேழையரென்னினுமுனூற்றிடுமுநியோர்
திருவில்வைகியநெஞ்சினரெனுமதைத்தெரிக்குங்
கருவிலார்ந்தனகண்டகக்கனிநனிதாங்கி
யருவவிண்கவித்தார்ந்திடுமவிர்சினைப்பலவே. (௫)

பஞ்சின்மெல்லடிப்பாவையர்மேனியிற்குழைத்துக்
கஞ்சவாண்முகக்கண்களைக்கறுவியேகல்லார்
நெஞ்சிற்காழ்கொடுநிறைமதுத்தண்டுளிநெகிழ்த்தி
மஞ்சுதோய்பொழின்மலிவனவாம்பலமாழை. (௬)

சீப்புவாரளகஞ்செறிசிறுமியர்பருவப்
பூப்புமேவுறப்புரிமுகங்கோட்டினர்புரைய
கூப்புசெந்தலைகுலைதரக்குனிந்தனவாகிக்
காப்புமேவியகாவினுள்ளனபலகதலி. (௭)

சீலமார்தழன்மும்மையுமோம்பிடுசெல்வர்
வாலிதாகவிவ்வனத்தினில்வாழ்ந்திடுவனப்பா
லேலுநங்கனியவற்குறுமிளைப்பினையாற்றப்
போலுமாலெனப்பொலிந்திடும்புனைமடற்றெங்கு. (௮)

கற்றமேலவர்கவியுறுகாட்சியிற்கவினி
செற்றநீக்கியசெயலினர்செல்கதிக்குறுதி
முற்றுநல்கியமுறைமையின்முரணினவிலவா
யுற்றதாருவினுயர்வளமுரைப்பதற்குண்டோ. (௯)

குஞ்சராசனங்கோங்குபுன்காலிகூவிளமே
விஞ்சுசண்பகம்விரைவகுளம்வியனுகங்
கிஞ்சுகங்கிரிமல்லிகைகிளரிதழ்க்கடுக்கை
யுஞ்சிவர்ந்திடுமுயர்மரமேனவுமோங்கும். (௧௦)

மறைவழுக்கினுமாதிரம்வழுக்கினுமரபாந்
துறைவழுக்கிலாத்துரிசறுமந்தணர்தொழுபாக்
கிறையடுக்கியவிலைகளைக்கதிர்களாவிரவி
நிறைவிலக்கியநீள்வனம்புகுந்திடுநெறியே. (கக)

வேறு.

சீதளச்சென்னியோன்றன்றிருவருள்பெறுவானென்றன்
நாதலம்புகலற்கொவ்வாநைமிசச்சோலைநண்ணி
பூதலம்பொருந்திவாழும்புனிதனைப்புரையுமேலோர்
மாதவம்புகன்றுவாழ்வர்மறையவர்வாய்மைமிக்கார். (கஉ)

இன்பமுமெதிர்வுமூழானியல்வதாற்களித்திரங்கா
தன்பினுக்கவதியின்றியைந்தெழுத்தார்வத்துன்னி
தென்பலித்தலர்ந்தவீக்கடிருவடியிணையிற்சூடி
யென்பதுமுருகப்பாடியேத்துவாரெழிலின்மிக்கார். (கங)

விரதவூண்மேனிஞானவேதியர்விரிஞ்சன்பூத்த
வுரைமலிஞாலமூழிபுலப்பிலக்கண்டோருய்வான்
சிரதலங்குவித்தகையர்சேகுறச்சிவன்பாற்சிந்தை
புரைதபுத்தெந்தஞான்றும்புணர்ந்தனர்புரிவாரம்ம. (கச)

அரிசிவபேதங்கற்பித்தவரவர்மனக்குவந்த
திரிபுரைகூறிவேதத்திருநெறிதிறம்புநீரர்
பரிபவக்கோட்டிவெள்கிப்பணிமுடிப்பரனைப்போற்றி
யரிமலர்க்கழலையேத்தியஞ்சலித்துறைவாராங்கண். (கரு)

அத்திரிததீசிகண்ணுவன்சதானந்தன்காமச்
சத்துருவாம்பிருங்கிசகம்புகழ்மார்க்கண்டேய
னுத்தமப்பிருகுபோதாயனனுயராபத்தம்பன்
சத்தியன்புலத்தியன்குச்சகன்சம்புசனற்குமாரன். (கசு)

காசிபன்பரத்துவாசன்கலைச்சிருங்கன்சாண்டில்ய
னாசுவலாயனன்சாபாலிநாரதன்றாலப்யன்
கூசுமாண்டன்மாதேவன்குசருபார்க்கவன்சனந்தன்
பேசகமருடணன்சிர்ப்பிரசண்டன்பெருஞ்சனாதன். (கஎ)

அரிதக்ன்கிருதன்கண்டுவெட்டவக்கிரன்வசிட்டன்
றெரிபிரசண்டன்றத்தாத்திரேயன்காலவன்பெருஞ்சீ

ருரியவங்கிரசுசாதாதபன்சுனச்சேபனுண்மை
புரிதவுமியன்சுமந்துபுலகனேகபிலன்கற்கி. (கஅ)

இனையபன்முனிவபாங்கோரியவிடங்குறித்துக்கூடித்
துனிமலிபிறவியாயதொடுகடற்பரப்பைத்தூர்ப்பான்
பனிமலையிமயமீன்றபாவையோர்பாகனீலத்
தனிமலையனையகோமான்றண்ணளிபெறுவதெங்ஙன். (கக)

விரதமோகொடையோமெய்யோவீங்குமெய்ஞ்ஞானபோதச்
சரதமோதேறகில்லோஞ்சத்தியவதிமுன்னீன்ற
வரதனும்வியாசவள்ளல்வண்பதமுளரிபோற்றிச்
சுருதிநூனெறிதெரிந்தசூதன்சொற்றுறைசூழ்தனன்றே. (உ௦)

என்றனருன்னவாங்கணிருந்தவச்சூதன்றுன்னி
நன்றெனமைவிழைந்தீருற்றநயப்பெவனவிறிரென்ன
பொன்றழீஇறவத்தண்ணுனின்பொற்பதம்புரிந்தோமைய
வின்றெமையளிக்கவேண்டியெம்முறைமுயெளிதுற்றீரே. (உக)

இருந்தவமுதியோயிங்ஙனெம்பவநோய்கள்வீயத்
திருந்துநஞ்செய்யபாதத்திருமலரிணைதந்தெய்த்தீர்
வருந்தவிரென்றுமாயவாழ்வெனுமளக்கர்சிந்திப்
பொருந்தியதவச்சீரெல்லாம்புணர்த்தெமைக்கோடியைய. (உஉ)

என்றனருழைவந்தெய்துமிருந்தவற்கெண்ணிலாத
நன்றிகள்பலவுமாய்ந்துநறுமலராதிகொண்டு
வொன்றியவிதிவழாமனுஞற்றுபூசனைகளாற்றி
கன்றியமனத்தராேனர்கழறுவார்கவிழ்ந்துநின்றே. (உஙா)

கொங்குயிர்த்தளிகடுஞ்சுங்குழலவட்கொருமாணுகம்
பங்குதந்தருள்செய்நாதன்பதமலர்பரவும்பான்மை
யங்கணவறங்களாதியறிந்தருளமலநின்போ
லிங்கணறியம்பவல்லாரிறையருணூல்களெந்தாய். (உச)

அமைவிலம்பந்தவாய்ப்பட்டாற்றலமளியமுத்தி
சமைவிலம்வறிதேகாலஞ்சரித்தனஞ்சாமியெங்க
டமைநனிகருணைகூர்ந்துதற்பரன்றுளிற்றுன்னுங்
கமைபுறுமுபாயமொன்றைக்கட்டுரைத்தருள்கவென்றார். (உரு)

அடுவினைப்பிறவிநோய்க்குமமுதகுஞ்சரனையஞ்சுங்
கடுநுழைகளத்தினானைகனமிகழ்குழலினாளை
தொடுகழல்சேயைமுன்னித்தூயமாமறைமுன்கோத்த
வடுவகன்ஞானபோதவள்ளலைவழுத்திச்சூதன். (உசு)

ஐந்தவித்தாற்றல்சான்றீரறைகுவல்கேண்மினீவிர்
பந்தமதறுத்துவீடுபெற்றுதற்குரித்தாஞ்செய்கை
யந்திசெய்மேனியண்ணலமர்ந்தருள்புரியுமூன்று
பந்திசெய்சிறப்புமுற்றபண்புடைத்தானங்கேட்டல். (உஎ)

அன்னதுசிந்தைசெய்தலன்புடன்பிறர்க்குரைத்தல்
பன்னுமத்தானத்தெய்திப்பரிவுடன்றீர்த்தமாடல்
துன்னளிதுதைபுக்கொன்றையாதியமலர்கடூவி
முன்னியமுதல்வற்போற்றல்முனிவிர்காண்முறைமைத்தென்ன.

உற்றதுகொண்டுமேல்வந்துறுவனவுணரும்பெற்றி
நற்றவநின்மாட்டெய்திநவையெலாநலியப்பெற்றே
மிற்றதெம்பிறவியையுமெமதுவிண்ணப்பமொன்றுன்
மற்றதுதெரித்துமின்னேமகிழ்ந்துகேட்டருடிமாதோ. (உகூ)

தக்கிணக்கயிலையென்னுந்தலப்பெருமகிமையோடு
தொக்கமூவேணிதீர்த்தத்தொல்புகழ்ச்சரிதமுன்னுண்
மக்கனமிலாதுகேட்டோமற்றுமோர்தடவையெங்கட்
கிக்கணமருள்கவந்தவெழிற்றிரிவேணிகாதை. (௩0)

என்றலுமுனிவர்கோமானின்னகைபுரிந்துளத்திற்
பின்றலிற்களிப்புத்தூண்டபிறைமுடிப்பெருமான்வைகுந்
தன்றனித்தலங்கடன்னுட்டக்கிணப்ரயாகையென்னும்
பொன்றலிறலமாண்பெல்லாம்புணர்த்தலென்புலமைக்காமோ. ()

கொடியணிநெடுமாடஞ்சேர்கூடலையாற்றூரென்றால்
படிதனிற்பாதகங்கள்பற்பலகோடியேனு
மிடிபொருமரவிற்சோம்பியிரிந்திடுமிதையுஞ்சோர்ந்து
நொடிதனிற்கண்டீரம்மநோய்துகொலதன்சீர்செப்பல். (௩உ)

எண்ணுமுனெனக்கானந்தமிவர்கின்றதென்னசொல்வேன்
நண்ணுநுங்கட்குண்டாதனவிலவும்வேண்டாநஞ்ச
மன்னியகண்டத்தெந்தைமகிழுகூடலையாற்றூராம்
விண்ணியன்மாடமூதூர்வினைவலிற்றவம்வேறென்னே. (௩௩)

நிலஞ்செய்ததவமென்றேத்துநீடலைகூடுமாற்றார்த்
தலஞ்செய்ததவத்தாலன்றித்தரிசித்தலெவர்க்குமாகா
வலஞ்செய்தசேடற்கேனும்வழுத்துமாமலரோற்கேனும்
புலஞ்செய்துமொழிதற்குண்டோபுன்மையேன்புகல்வதெங்ஙன். (௩௪)

ஆக்கமுமழிவுநீவிராணையிற்கிளந்தசொல்லே
யூக்கிடுமுயர்விற்றுகவுணர்த்துவான்வினவலுற்றீர்
பாக்கியமிதனின்மிக்கபலித்திடல்வேறுமுண்டோ
நோக்கியதவத்தீர்கேண்மினுவலுவலெனவுட்கொண்டான். (௩௫)

நைமிசப்படலமுற்றும்.

ஆகப்படலம் ௨க்குத் திருவிருத்தம் ௫௫.

௩. தலமகிமைப்படலம்.

மும்மையெனுங்குணங்கடந்தான்முன்னொடுபின்னில்லாதான்மூவாஞான
தம்மைநிகர்தனிப்பரமன்றண்ணருளாற்றம்மடியார்தங்கட்குற்ற [றுங்
வெம்மையெலாம்போக்கியருள்வித்தகனும்விண்ணோர்கள்விரைந்துபோற்
கொம்மைவருமுலைப்பாகன்குனித்தருளும்பதியினியல்கூறக்கேண்மோ. ()

கொத்தானமூர்த்திகளின்வடிவாகிக்குவலயங்கட்கெல்லாமேலாஞ்
சத்தானதலங்களிலேசத்தானதலமிதுவென்றெவருஞ்சாற்று
முத்தானமணிநதியும்வெண்ணதிசேர்பாரதியுமுடுகிக்கூடு
மத்தானப்பெருமையவனன்றவதுநந்தாபமெலாமலக்கண்செய்யும். (௨)

இயங்குமுடம்பாதியுடம்பட்டிணையுநில்லாமலிணைத்தகொன்றை
தயங்குமுடிப்பரனடியாந்தடவிதழ்த்தாமரைக்கணுறுந்தகைமைதந்து
வயங்குபலபோகமெலாம்வகைவகையுண்பித்துவழிவழியாச்செய்த
வுயங்குவினையாதியவங்கொருகணத்திலுகைத்திடுமாலுணர்வின்மிக்கீர். ()

எய்ப்பிடத்திலெண்ணுங்காலிரவியெதிர்பனிபோலாமிணங்குபந்தக்
கைப்பிடமாங்கடலிடத்துவங்கமெனக்கரையேற்றிக்கலங்கலூழ்த்து
வைப்பிடத்திற்செயுமறங்களத்தனையுமோரிமைப்பில்வழங்கிவண்மைக்
குய்ப்பிடமாமரன்கயிலைக்குறுநெறிதந்துய்விக்குமோங்கலன்னீர். (௪)

கருச்சிதறுமப்பதிக்கட்கல்லாகிப்புல்லாகிக்கணக்கில்பேத
திருச்சிதறும்பிறவிகளிலெவ்வையுறினுமாங்கவைதாந்திரிபொன்றின்றி

வரிச்சிறகர்துவன்றிநறுவழிந்தொழுகக்குடைந்தாடுமெறுகுவேணி
யுருச்சிகரத்தலைமணந்தவும்பர்பிரான்கழலிணைக்கணுறுவதுண்மை. (௫)

இட்டிபுதினாயிரமற்றியற்றினும்பல்லெழிலறங்களிறும்பூதெய்த
வுட்டிரியாதுஞற்றினுமிப்பூதலத்தினாதலங்கொண்டுணர்த்தலாகா
மட்டிரியும்புனற்கோதைமடந்தையொருபாகத்தின்மணந்தவெந்தை
சிட்டர்விரையப்பதியைத்தரிசிக்கவுறுஞ்சிறப்பிற்சிறவர்தம்ம. (௬)

பண்ணாடுவரிச்சுரும்பர்களியயரும்பதுமமிசைப்பரிந்துவைகுங்
கண்ணாடுகுழலுடையகலைமகளுநிலமளந்தகரியோன்மார்பத்
தென்னாருமருண்மல்கியினிதுறையுமிந்திரையுமிறைஞ்சிப்போற்ற
மண்ணாடுவருபுனலாய்க்கங்கையொடுமெத்தலத்தின்மணப்பதென்றால். (௭)

சத்தியமாமுனைவரையன்றிச்சடங்கொடுக்குமுரைகடிந்தசால்பின்மிக்க
வுத்தமநாவுடையரெவரானாலுமதன்மகிமையோதற்கில்லை
நத்தியன்றுமணிகொழிக்குமக்குடிஞைதனினைநலக்கச்செய்தான்
முத்தியுறமூவேழுதலைமுறையுஞ்செய்பவங்கண்முளியுமன்றே. (௮)

தரைப்புவியிற்செவிடூமைகுருடுமுடமாதியவித்தகையினோர்க
ணுரைப்புதியந்நீத்தமுறத்தோயிலவர்நொய்யவினையெல்லாநூறித்
திரைப்பரவைநுகத்திலொருதிரைப்பரவைகழிநுழைந்ததிறத்தைமானு
முரைப்பரியமானிடமுற்றும்பர்பிரானடியனெனவுய்வரன்றே. (௯)

உயிர்பிரித்தூணருந்தியுகுமுடல்பெருக்கியுவகையுறுமுய்விலோர்கள்
வயிறதுக்கப்பிறர்பொருளைநெஞ்சமுறவஞ்சித்தோர்வறியரானோர்
பயிரழித்தோர்பரனடியார்பசித்திருக்கப்பார்த்திருந்தபதகர்வீழுஞ்
செயிரழிக்குஞ்சிந்தைசெயிற்சேகுறுவர்சிவகதிக்கேசேர்வராங்கே. (௧௦)

மனைவியுயிர்வீயமகன்மனைவிகையாலொருபொழுதூண்மடுத்தவாய்வில்
வினையர்வழியுறுநிரயம்வீழாமல்விரைந்தவரைவிடுவித்தெய்யா [மைக்
நினைவினெறியகைத்தயலோர்நிந்தைசொல்லப்பிறனில்விழைநீசர்தம்
கனையெரியிலாழாமற்காத்திடுமாலதன்பெருமைகணிப்பதேயோ. (௧௧)

நலந்தீதென்றெண்ணுமனுநிலத்திலறம்வளர்த்தநல்லோர்நாணக்
குலந்தீமையுறப்பொருந்துமெக்குலமுமெனக்குறித்தகொடியரேனும்
அலந்தீரவப்பதிக்கணறுகாதியருமலர்கொண்டரனைப்போற்றிச்
சலந்தீரம்படிந்தொருகால்சாத்திமுறைதொழவவர்தஞ்சழக்குநீங்கும் (௧௨)

அழுவாயர்நெறிபுகுந்தெம்முறையிதுவாலெனவுரைத்துமார்த்துப்பொங் [கித்
தொழுவாய்மைகெடநோக்கந்தொட்டபடிவழக்கழித்துத்துவ்வையார்ந்த
கழுவாதவினைபயின்றகடையருக்குங்கதியூட்டுங்கழுவாயான
மழுவாளியுமையோடுமகிழ்ந்தருளுமப்பதிபோன்மண்ணிலுண்டோ. (கங)

இனியாருமில்லையெமைப்புரப்பதற்கென்றழிந்திரங்குமேல்வைநீவிர்
கனியாதிரெனக்களைகணுகுவலென்றேற்றுரைக்கனவிலேனு
நினையாதுமறந்தவர்க்குய்வில்லையெனநிகழ்த்தினுநூனிறைநீர்தங்கு
மனையாகுசெஞ்சடிலத்தண்ணல்வளம்பதியாங்கண்மருவிலுய்வார். (கச)

பெரியார்சொற்பேணுமற்பிழைத்துநெடுஞ்சுடுமொழியாற்பேதுகண்டு
மரியாதையெனும்வளங்கொன்றுறுதமயல்விளைந்தமதியிலாத
எரியாழுமிழுதைகளுமெல்லெழுந்தாலெனமனத்தினேதநீங்கிப்
பெரியார்க்கும்பெரியாராய்ப்பிறங்குவராலப்பதியைப்பேணின்மாதோ (கரு)

சந்தமறையந்தணர்கள்சலிக்கவருந்தானமெலாஞ்சாயாதீந்து
பந்திமுறைப்போசனமுஞ்சுவையாரப்பண்ணுவித்தப்பதியின்மாடே
கந்தமுதலாகியபாகடையளித்தோர்காலமெலாங்கயிலைநண்ணி
யிந்துமுறிச்சடையிறைவனிருசரணந்தலைகமழவினிதுவாழ்வார். (கசு)

இவையாகும்பிரமஹத்தியெனவறநூலியம்பியவையெல்லாஞ்செய்தோர்
கவையாகுமனத்தொடுபொய்ச்சான்றறிந்தோமெனக்கழறுங்கடையரா
நவையாதியாங்காமநலிவுறக்கானடையேபோனுணைமின்றி [னோர்
யெவையாகுமென்புணர்தலின்பமெனமுறைவிலக்கியிணங்கினோர்கள். ()

பானெயொடுதேன்பளிதம்பாகிரும்புபழம்பட்டும்பவளமாதி
யூனமறம்பகமணியோடுயர்வலவாயங்கலவையொளிர்வான்முத்தே
யீனமுறக்கவர்கள்வரித்தூனைபேரும்மிருந்தாங்கிறைவற்போற்றித்
தானமுறப்பெய்யிலறந்தழைத்திடுமோலாரிருளுந்தகருமாலோ. (கஅ)

கணியொற்றிநூலறிவார்கட்டுரைக்குங்கரியென்னக்கரிசுபோக்கும்
பணிபற்றுமதியிரவிபாவுறுநாட்பனகமணிப்பாவைபங்கன்
றிணிவுற்றபதமலரைத்திரைகூடுமப்பதியிற்றிகழவைகிப்
பணிமுற்றப்புரிந்திடிலேழ்பவஞ்சுமந்தபாவமெலாம்பாறுமன்றே. (ககூ)

அகரமுதலக்கரமூன்றருள்வடிவாம்பிரணவமாயமைந்தவாபோற்
சிகரமுறுமத்தலத்திற்றிரிவேணிசெறியுமிடஞ்சென்றுதோய்ந்து
மகரமுறுமாதமெலாமலங்கடிந்துசிவபூசைமகிழ்ந்துசெய்யிற்
பகரமுளையாரவரேபதியுருவிற்பதிந்திலங்கிப்பரமாய்க்காண்பர். (உ0)

சேமருவுசோலைவளர் திரிவேணிசங்கமத்திற்றெரியக்கொண்டாங்
கேமவெலும்பிடவதுதானிருங்கயையினுறும்பயன்மற்றெய்திற்றாகிப்
பேமகலப்பிணிகடைஇப்பிஞ்ஞகன்றாள்பெறுவரெனப்பேணிச்செப்பு
நாமவறிவுடையோர்நன்னூல்பலவாமெனநாடிநவில்வர்மாதோ. (உக)

திருவக்கம்புனைந்துதிரிவேணிபடிந்தெழுந்தான்றன்றிருநீறேந்தி
மருவக்கம்புயமாதியங்கமெலாம்புண்டரமாமலியப்பூசி
யொருமுக்கால்வலம்புரியினோவாமற்கயிலையின்கணும்பரேத்த
வருமுக்கணிறையருளவாழ்ந்திருப்பாரவர்பெருமைவழுத்தப்போமோ. ()

வேறு.

எள்ளுநீருமிறைப்பதற்கெச்சமென்
றுள்ளுவார்க்குறுகண்டுடைத்தேயளித்
தள்ளல்செல்வமுமாரவளித்தரும்
வள்ளலாக்குமிவ்வையமிசையரோ. (உங)

மறையைவிற்றவர்மாதரைக்கொன்றவர்
குறையவேதியர்கூற்றையிகழ்ந்தவ
ரிறையையெள்ளிநரெவ்விடுழந்தவர்
நிறையமைவகினெறிபுகுவாரரோ. (உச)

பிதிரருங்கடன்பேணிப்புரிகிலா
ரதிரவந்தவர்க்கஞ்சலளித்திடார்
முதிரமூத்தவரைமுனிந்தேசினோ
ருதிரபானமொழிகுவருன்னினே. (உரு)

பிச்சையென்றபிணங்கியநெஞ்சினர்க்
கச்சமேறியழுங்கிடவார்த்திடுந்
துச்சநீரருந்தோன்றிடினவ்வழி
நச்சுவாய்நரகம்புகார்நாடினே. (உசு)

தாரமாதர்தந்தோள்குயந்தொட்டவர்ச்
சேருநீசச்சிதடர்செருவிலே
பூரவிட்டுப்பிரிந்தவர்புந்தியா
லாருங்கும்பியளைவதாங்கில்லையே. (உஎ)

கலையவிழ்ந்துகவிழ்ந்துமண்ணோக்கிய
மிலையிகழ்ந்திடுமாமுலைமங்கையர்
நிலையழிந்திடநின்றுகண்ணோக்கினோர்
தலையழிந்திடுபாவந்தகருமே. (உ௮)

ஐயவென்னுமசட்டுவலியடர்
வெய்யகாசம்விழிப்படையேவெகுண்
டெய்யுஞ்சூலைவெரியிழிநீரெலாம்
பையவேகும்பணிந்தருகெய்தவே. (உ௯)

தொட்டுவூன்மிகத்துய்த்தவர்தொல்லறம்
விட்டழித்தனர்வேண்டித்தமக்கென
முட்டவாழுமுடையருமுன்னிலாங்
கிட்டமானவெலாமெய்துவாரரோ. (௩0)

ஈன்றவர்பசியாலிழிவெய்துற
வென்றுதம்பசிக்கேறவருந்தினோர்
கான்றவாயிற்கனன்மழுவுய்த்திடார்
நோன்றவாங்கணுமையப்புகினரோ. (௩௧)

ஆக்கந்துன்னியழிபுமென்றோர்கிலார்
தேக்குநல்லறந்தேறவறிகிலார்
நோக்குசிந்தையாணுய்தவண்ணேர்தரம்
வாக்கவாழ்வரால்வண்பதமாமரோ. (௩௨)

ஞானமுன்னியுநான்மறையுன்னியும்
போனகல்விப்புரைதபவுன்னியு
மானமுன்னியுமாதரையுன்னியும்
வானநாடரும்வந்திழிவாரவண். (௩௩)

சிறியரென்றுரைசீரியவல்லன
வெறியுறச்சொலும்வெய்யவர்வாய்வழி
நறியவல்லனநாணிடப்பெய்வதாங்
கறியினவ்வுமையழுண்மிடினில்லையே. (௩௪)

காலைமாலைகதிரவற்போற்றியே
சீலமுன்னியசெய்தறியார்பிழை

யோலமென்றாரஞ்சிந்திமற்றேய்ந்திடு
ஞாலமுய்யுமன்னற்பதிநண்ணவே. (௩௫)

வெய்யவெய்யனவீட்டிடும்வேண்டிய
செய்தசெய்தவஞ்சித்திக்கு,ஞ்செம்மையாம்
பெய்தபெய்தவறம்பிழையாதுறி
னுய்யவுய்வனவுண்பிக்குமுண்மையே. (௩௬)

மதுவையுண்டுமயங்கிமயங்கிதீ
தெதுவையும்புரியினர்கள்வாய்வழி
புதுவைகாய்ச்சிப்புகுத்திடுபுன்கணுஞ்
செதுவிவீழ்த்திடுஞ்சேணுறுமப்பதி. (௩௭)

வேதமோதியவேதியாத்துறைச்
சீதநீர்படிந்திட்டான்செய்யதா
ளோதில்விண்ணுறைபொண்டொடிமாதர்தோள்
காதனீங்கக்கலப்பர்கள்காண்மினே. (௩௮)

இன்னதன்மையவித்தலமாண்பெலாம்
பன்னலாவதிலைபணிகாசியிற்
சொன்னவாய்மைச்சுகனுக்கன்றோதிய
வென்னையாட்கொளிருந்தவன்சொற்படி. (௩௯)

ஓதுவல்லினுமுங்களுராங்கொளப்
பேதியாதுபிறங்கிடப்பெய்விரா
லாதிநாயகற்கஞ்சலிதூக்கிய
வோதியாளுமுயர்தவத்தொள்ளியீர். (௪௦)

தலமகிமைப்படலமுற்றும்.

ஆகப்படலம் ௩-க்குத்திருவிருத்தம் ௯௫.

௪. அரியயன் அடிமுடிதேடு படலம்.

சீர்த்தியத்தலச்சிறப்பினையுரைத்தனஞ்சிலவே
யார்த்தரன்றனியடியொடுமுடியினைத்தேடி
வேர்த்தயன்றுழாய்விண்ணவன்வெள்கியகாதை
யோர்த்துளங்கொளவுரைக்குதுமுவப்பொடுகேண்மின். (௧)

மூன்றுவானவர்சித்தர்சாரணர்முனிவோர்க
டுன்னியெங்கணுமுறைறமுறையோதிடுந்துழனி
யின்னும்வெம்பவமிலையிலையிவணுறுமியலார்க்
கென்னும்பான்மையினிலகுறுங்காசியம்பதியே. (உ)

காணியாக்குவல்கைலையைக்கதிவிழைந்தோர்க்குத்
தோணியாகுவல்பவக்கடல்கடந்திடத்துணிபே
பேணினார்க்கிருமையும்பலபிறங்கிடுபோக
மூணியாக்குவலென்பதுமொத்ததவ்வோசை. (ங)

மணியழுத்தியமாடங்கணிறைர்வனமஞ்சா
ரணிகொளுத்தியவம்பரமூடுபோம்புரிசை
பிணிமுருக்கியபிஞ்ஞகனுருவெனப்பிறங்கிக்
கணிவகுத்திடற்கரியதாய்க்கவினுறுங்காசி. (ச)

கங்கையென்றுலகேத்தியகடவுண்மாநதியாங்
கெங்குதொல்பவமெங்கெனநணியிரைத்திட்டுப்
பொங்குபாதலம்போழுறப்புணரியைத்தொட்டே
யெங்குந்தேடியவருவதையேய்ந்திடுமினிதே. (ரு)

எள்ளுங்கொள்ளிடமின்றெனவெவ்வணுவணுறினுந்
தெள்ளுநம்வினைத்தொழுவினையகழ்ந்திடுந்திறத்த
வள்ளுமண்ணெலாமிலிங்கமாய்க்காண்குறுமென்றால்
விள்ளுங்காசிபோல்வீறுடைத்தனித்தலமுண்டோ. (சு)

இன்னதன்மையவெனவெடுத்துரைப்பதற்கரிய
வன்னகாசியினனகணுயாருயிர்தோறும்
பின்னமின்றியேபில்கிடுமெள்ளினெய்போல
வுன்னுமப்பரம்பொருளினைவேறெனவுணரான். (எ)

அகத்தினைந்தெழுத்தறலிடையருவிபோலொழுக்கிச்
சுகத்தியானமாய்விளங்குறுஞ்சுகனெனும்பெரிய
மகத்தியானமாய்மன்னியமறைமுதல்வகுத்தோன்
சகத்திறைஞ்சிடவெழுந்தவண்சார்ந்தனன்சரித்தே. (அ)

மருளைநீக்கியமாதவர்மாணவரோடுந்
தெருளைமுன்னியதிகழ்ந்தனர்யாவருந்திகழ
வருளைமுன்னியவம்பகச்சுகனதுதெரியா
விருளைநீக்கியவிரவியினெழுந்தனனிறைஞ்ச. (௯)

இன்றைநோக்கியகறவையிற்கசிந்துளங்கதுவ
வொன்றவுச்சிமோந்தூழுறக்குராங்கினிலூன்றி
யென்றுங்காண்குருவின்புறுபுணரியினிழிந்து
நன்றுகாணுனைப்பெற்றதின்பயனெனநயந்தான். (௧௦)

விதுபுணர்த்தியவிரிசடைக்கடவுளைவிழைந்து
றொதுமலற்றிடநோற்றிடுமுனிவரர்நோக்கி
யிதுபெறும்படியிருந்ததெத்தவமெனவறியோந்
துதியருந்தவவென்றனர்துளங்கியங்கமர்ந்தார். (௧௧)

மைந்தவென்றுதம்மைந்தனைமலிவெலாம்வினவி
யெந்தைவியாதனுங்கிருந்துறுபேல்வையேனையரை
யைந்தவித்தருள்கடிந்திடவருட்கதிர்விரியும்
புந்தியுற்றநும்புணர்ப்பினிதாகுகவென்றான். (௧௨)

அழலையோம்புதலருமறையோதுதன்முதல
வழுவகில்லிரோவண்டவமுஞற்றிவாழுதிரோ
நழுவலின்றியேநன்றெனக்குரைத்திராலெனலுந்
தொழுதசிந்தையர்தண்ணெனவுரைத்திடத்துணிந்தார். ()

வேறு.

அன்புகொண்டெமைப்புரக்குமறவனேயமலஞான
முன்புடைமுதல்வபோற்றிமுழுத்தவமுடைமையாற்று
மின்புறுசெயினோடேயிதமுறத்தமையுங்கண்டு
துன்பெலாமகலப்பெற்றோந்துருவின்மற்றிதனினுண்டோ. (௧௪)

இவ்வண்ணமுனிவர்போற்றவிருவினையொப்புவாய்ந்த
செவ்வண்ணச்சுகனுமன்னோர்செம்மனச்செறிவையோர்ந்து
மைவண்ணமகற்றுமெந்தாய்மலியுமிப்பிறப்பைவீழ்க்கு
மெய்வண்ணப்பரத்தைக்காணுமேன்மைபப்புகறிமாதோ. ()

வேறு.

இலையறிவனவெனவியம்புமியாவையுந்
தொலைவிலவறிந்திடுதூயமைந்தநீ
நலையெமைவிழைந்ததுநவிலுகிற்பல்யான்
மலைவிலைகேட்டியான்மகிழ்வுதுன்னவே. (௧௬)

ஒன்றறிஞானிகளுளச்சரோருக
மன்றினிலார்ந்ததுமதிக்குமேலதா
மின்றனிப்பொருளினையெவர்க்குமிற்றென
லொன்றியதிலையதையுணர்த்தலெங்ஙனம். (௧௭)

உயிர்தொறுமுலப்பிலவுணர்வின்மேலது
செயிரறுபரம்பொருள்செறிந்துவேறுரு
வயிரறுபான்மையறியுநீரது
வெயரிஞோர்க்கரியதுவிள்ளப்புக்கினே. (௧௮)

சத்தையுமசத்தையும்பிரிக்கவல்லது
மெய்த்திடுதத்துவமேன்மையெண்ணில
சத்தெனச்சித்தெனச்சலிப்பிலானந்த
வத்துவிதம்மதோவழிவதில்லையே. (௧௯)

கயிற்றரவெனவகல்கானனீரென
மயற்படநாசமாய்மலினமின்றியே
வெயிற்படுமுலகமாய்விரிந்தவற்றுளே
வயிற்படவொடுங்கிடும்வண்மைத்தப்பொருள். (௨௦)

எக்குணங்குறிகளுமின்றியெங்குமா
மக்குணந்தன்னிடையலங்குமாயையாந்
தொக்கினடோன்றிடுந்துலங்குபூதமும்
விக்கிஞவிக்கினமாய்விளங்கிடும். (௨௧)

அப்பரம்பொருளயனரியொடாதியாந்
துப்புடையமரராய்த்துலங்கத்தொண்டர்கள்
விப்பிதவுள்மலர்விரியவேய்ந்தனர்
செப்புவர்தோத்திரஞ்சிவண்த்தாமரோ. (௨௨)

ஆக்கலையாதியவகலகில்லதாய்த்
தூக்கினானிறுவிய துளக்கமில்லதாய்ப்
போக்கலும்புணர்த்தலுமின்றிப்புஞ்சமாய்
வாக்கினான்மனத்தினான்வடிப்பதில்லதாய். (உ௩)

ஐங்கலாவடிவமர்யவைக்கப்பாலதா
யெங்குமாயிலங்கிடுமேதமில்லதாய்த்
தங்குறுமங்கதுதாக்கலற்றதாய்ச்
சங்கையின்ஞானமாய்ச்சாந்தமாயது. (உ௪)

தத்பதக்குறியதாய்த்தாணுவாய்ப்பிற
நற்பதமெவையுமாய்நாதவிந்துவா
யுற்பலவுருவணைமயோங்கலாய்வளர்
சிற்பரமாமதைச்சிவமென்றேத்துவார். (உ௫)

அத்தனையறிந்தவரகற்றும்பாவமாம்
வித்தினைவீட்டினர்விம்மிதத்தராய்ப்
புத்தியிற்பேதமாம்புலம்பல்போக்கியே
முத்தியின்மூலமாய்முன்னநிற்பரால். (உ௬)

அன்னரேயந்தணரதனையுற்றிடும்
பின்னமிலருநெறிபேணுகிற்கில்யாந்
துன்னியவாதரத்தொடுந்துலக்குவல்
நன்னரினறிந்துளநலக்கவேண்டுமால். (உ௭)

போற்றியகுருவருள்பொங்கப்போற்றியே
போற்றியமறைப்புலம்புணர்ந்துபோற்றியே
போற்றியசித்தமும்பொலியப்போற்றியே
போற்றியகுருவுபதேசம்போற்றியே. (உ௮)

அவ்வழிஞானமேயடைந்துமோக்கமாந்
துவ்வழியடைவரத்தோற்றமில்லவர்
செவ்வழியடைவதாந்திறமுஞ்செப்புவல்
மெய்வழியுற்றநீர்மேவிக்கேண்மினே. (உ௯)

விதியுளிவிக்கிரகங்கள்வெஃகியே
துதியுறல்பூசைகடுலங்கவாற்றுதல்
கதுவியவன்பினாற்கண்ணுதற்பர
னொதுமறீர்தலங்களினுகரல்வைகியே. (ரு0)

அளந்திடற்கரியநல்லறத்தினங்கமாங்
குளந்தொடலாதியகுயிற்றியந்தணர்க்
குளந்தொடக்கருணையொடுவப்பினூட்டுவித்
திளஞ்சொலாலன்னரையிறைஞ்சியேத்துதல். (ருக)

இன்னபன்னற்செயலிவறலின்றியே
பன்னுறச்செயினதுபலித்துப்பைப்பய
முன்னுறுஞானமுமுளைத்துமுத்தியுங்
கொன்னுறப்பெறுவரால்குணிக்கினன்னரே. (ருஉ)

வேறு.

மெய்யமைவேதங்கூறியதிவையாமேதினியதிற்பலகோடி
நொய்யவெம்பிறவிநுழையினுமிலையாநுவலருஞ்சிறப்பினையுறுதல்
கைதவநீரர்கடவுளாலயத்தைக்கடிந்தனராய்த்தமமனமே
ஐயனார்தலமங்கேகவென்னென்பாரருநரகெய்துவாரவரே. (ருங)

என்றனனாங்கணிருந்துழிச்சுகனுமிருசெவிக்கமுதெனக்கேட்டு
நன்றமையளித்தநாதனேயொன்றுநவிலுதல்வேண்டினமதுதாம்
பொன்றியமனத்தராயினும்புகுந்தால்புரைதபுவீட்டினையளிப்பா
னொன்றியதலந்தாமெவையவையின்னேயுரைப்பதோடொண்புவிதன்னில்

பையராப்பணத்தின்மணித்தவிசிருந்தபாரினிலேழ்தலம்பைதல்
கொய்தரும்வீடுகொடுத்திடுமென்பர்குறித்திடினவைபிரயாகை
வைவறுகாசிதுவரைவாரயோத்திவளமுறுகாஞ்சியேமாயை
யுய்வருமதுரையிவையொருஉவறவேயொளிரவுமும்பருக்கிறைவன். (ருரு)

அவந்தியேயாதியைவகைப்புரங்களமைத்தருள்புரிவதென்னெமக்கே
யுவந்தனைகொண்டீண்டுணர்த்துகவெந்தாயென்னலர்மணிமுடிதுணித்துக்
கவந்தமதாடக்கண்டுகெண்களிப்பான்கந்தனைக்கடவுளர்க்களித்த
சிவந்தனையூன்றிமலந்தனையழித்துச்சிவமதாய்விளங்குசிற்பரனே. (ருசு)

வேறு.

நஞ்சுடனமிர் தந்துன் னுநங்கைமார்நாட்டவைவே
லஞ்சிடத்தவமென்ரேறுமமணிவிடையவிரத்தோன்றெறம்
விஞ்சுமாதரத்திலுற்றவேதியவிழைந்துகோண்மோ
பஞ்சடைபொறியிற்பாவம்பாற்றிடும்பண்பிற்றதே. (௩எ)

கொந்தவிழ்த்தளிகளாருங்கொன்றையைக்குழவித்திங்கள்
பந்தமாஞ்சடையிற்சூடும்பண்ணவற்குவப்பாங்காதை
மந்தணமாகுமன்னமற்றதைமதிக்கப்புக்கி
னெந்தமாக்கதைபுமொவ்வாதிருநிலவரைப்பின்மிக்கோய்()

வேறு.

செந்தாதுகிளைத்திழிதேன்மதுகரங்கள்திளைத்தாடுசென்றுபொங்கு
மந்தாமரைப்பொகுட்டினருமறையோன்முன்னொருகாலடைவினெகி
நந்தாநற்பாற்கடலினகுமணிச்சூட்டரவினிடநயந்துகொண்டல்
செந்தாமரைமுகிழ்த்தாலெனத்திருக்கண்வளர்மாலைச்சிவந்துநோக்கி(௩௯)

என்னைமுனமீன்றோமென்றிறுமாப்பினுறங்குதியோவெழுகவென்றல்
மன்னியவிப்புவனமிடையடங்காதோபாற்கடன்மற்றென்னையன்றித்
துன்னியதோர்பாப்பணையுந்துலங்கினையோநீயாகத்தாணின்மற்றும்
பன்னருநின்பிறவியெலாம்படைத்தவராருண்டென்னிற்பகர்திமாலே. ()

காற்கொண்டுநிமிர்ந்தெழுந்தகடைக்காலமுகிலென்னக்காளமேனி
மாற்கண்டங்கெழுந்தெனதுமைந்தாநின்வாய்மையெலாம்வழுத்தற்பால
பாற்கொண்டபிள்ளைபலபேசிடின்மற்றவர்ப்பயந்தபரிவினோர்கள் [காலே.
நூற்கொண்டுதெளிப்பதலாற்கோற்கொண்டுபுடைப்பதெவனொடிக்குங் ()

சேலாடுகண்ணுடையசெந்திருவுங்கவுத்துவமுஞ்சேர்ந்துதோன்று
நூலாடுமார்புடையோனின்னபலநொடித்திடலும்நொய்தின்வேதன்
மாலாடுமனத்தினனுமண்ணுண்ணுமால்வயிறமதியாதென்னைக்
கோலாடுபிள்ளையெனக்குறித்தனையோநன்றென்னக்குலுங்கநக்கு. (௪உ)

ஆர்த்தெழுந்தானதுகண்டவமரரெலாமடுங்காலமடுத்ததென்ன [யாவுங்
வேர்த்தெழுந்தார்வெய்யோனும்வெய்துயிர்த்தான்வேலையுளவிளிந்த
கார்த்தெழுந்துகாலனுமீதென்னுற்றதெனவழுங்கக்கரியகோலத்
தீர்த்தனுநன்றென்னநகைதெரித்தனனெய்நிமிர்கின்றதிண்மைநோக்கி. ()

பஞ்சாதி மறையவரும் பண்ணவரு மதுகண்டு பெயர்ந்து நக்கன்
செஞ்சாதி மலரடியைச் செயசெய வென்றேத்தினஞ் செறிந்தாரைய
மஞ்சாரு மேனியனு மலரயனு மறிப்பதற்கார் மற்றுமுண்டோ
வஞ்சாதிரெனவறைந்தாங் கவர்சினத்தை யடல்வேண்டு மெளியமென்றார். ()

வேறு.

நக்கநல்வர நல்கிலையாமெனிற்
புக்குவாழும்புரமிலைபொன்றுவேஞ்
செக்கர்மேனிச்சிவசிவசிந்தைசெய்
தெக்கர்போக்குதியெம்விழைவிற்றரோ. (சரு)

பாப்புமேவியபண்ணவனும்பய
மீப்பூமேவியவிண்ணவனும்வெகுண்
டேப்புலந்தனரென்றழிந்தேம்பலிர்
நீப்பலன்னவர்நேர்வதுமெங்ஙனே. (சகூ)

என்றுவாய்மலர்ந்திரநதிச்சடை
மன்றுளாடியமாமணிமற்றவர்
நின்றமர்த்தொழினீடியகண்ணுறீஇ
நன்றுமக்கிதுநன்றுநன்றீதரோ. (சஎ)

ஆக்கம்பொன்றியழிதகவெய்திடு
மேக்கழுத்தமிவரிவெரிவிழூஉ
மீக்குலம்மெனவெண்ணினழிவராற்
றூக்கலெங்ஙன்றவிர்மின்றவிர்மினே. (சஅ)

முறைமைகொன்றிடுமுன்பைபுகுத்திடுஞ்
சிறைமைசெய்திடுஞ்சீரியவல்லவாந்
துறைமைபோக்கித்துவைக்குந்துவைக்குநம்
மிறைமையென்படுமேழ்மையிதேழ்மையே. (சகூ)

நானென்னுமொன்றைநட்டுவளர்த்திடி
னீனமல்லதொன்றெய்தப்பெறுவரோ
மானம்வீழ்த்திமதியினைவீழ்த்தியாங்
கேனவீழ்த்துமற்றீதுமற்றீதரோ. (ருo)

நட்புநாரிலைநன்றிமற்றில்லையா
லொட்பமில்லையுணர்விலையுய்விலை
திட்பமில்லை திருவிலைதெய்வதப்
பெட்புமில்லைபிறகெவன்பேணலே. (௫௧)

என்னவுந்தணியாதவரேற்பதை
முன்னிமுன்னுமுதல்வர்க்குமுன்னவ
னின்னல்காணுமிவரினிவரியோர்
நன்னர்காணுதுநாமினியென்றனன். (௫௨)

வேறு.

நாற்றிசையுலகமுநடுங்கிப்போழுறத்
தோற்றமுங்கொண்டனிர்தொலையகிற்றிலீ
ராற்றலார்திறத்ததென்றறியமுன்னினேம்
நோற்றநீர்கேண்மினோநுவல்வதுண்டரோ. (௫௩)

எம்மடிமுடியினையிணையினீவிரே
தம்மெனவெவரதுதக்கராவரே
நும்மிருவரினுமியாநோன்மைசான்றவ
ரம்மெனவறிகுவமறிதிராற்றலீர். (௫௪)

என்றனனிறைவனுமிம்மெனுமுனந்
தன்றழலுருவினைத்தழலும்வேவுறப்
பொன்றலினுலகெலாம்போக்கித்தம்பமாய்
நின்றனன்கண்களுநெகிழக்கண்டனர். (௫௫)

விளரியார்தவிசுடைவித்தகன்முனம்
பளகிலாவெகினமாய்ப்பறந்துபாய்திரை
தளர்வறுமுடிதனைத்தாவிக்காண்பலென்
றுளமலிகாதலினுரைத்துப்போயினன். (௫௬)

வானமேயாதியாய்வழங்குபூதமாய்த்
தானமாயெவற்றையுந்தரித்துக்காத்திடுந்
தேனவாந்துளவணிதெரியலானுமற்
றேனமாயிடந்தடியிறைஞ்சப்போயினன். (௫௭)

வேறு.

போகவதிபுகுந்துமரன்பொன்னுருஞ்சினகரத்தைப்பொலியக்கண்டு
மேகவதிசயமிதுவாச்சென்னேயிவ்வடியிருந்ததெளிமைத்தில்லை
நாகமுடிமிலைச்சுமவன்றன்காணப்புக்குறினுநாட்கள்செல்லு
மாகவினித்தேடரிதாமடைக்கலமென்றவற்குறுகியடைவலென்று. (௫௮)

அண்டமெலாந்தன்கோட்டிலணுவாக்கியடலரக்கன்கவர்ந்தவன்றாள்
கண்டபெருமாமாயன்களைத்திருந்தானிவ்வண்ணங்கழறிப்போந்து
அண்டர்பிரான்றனைப்போற்றியடிகளீதடைந்தபடியண்மைத்தில்லை
தொண்டர்படிதனைக்கடவாத்தூயோனேயென்றனைத்தொழுதானிற்க ()

செம்போதன்முடிதேடித்தீமையேனின்றுனைச்சினந்ததீமை
யம்போதமழித்துண்ணவாரிடர்ப்பட்டழிகின்றேனரனருன்றுன்னித்
தம்போதந்தந்திடவுந்தடுத்தயுர்வாற்றருக்குற்றேன்றணிந்தேனில்லை
வம்போதவுலகென்னைவழுத்தரன்றன்முடிதேடவாய்ப்புற்றேனே. (௬௰)

அயுதமறுபான்வருடமடைந்தனமற்றதிற்பாதியடைந்தோமென்றற்
கெய்தவருமோவதுதானெட்டுணையுமிலையிலையாலெண்ணிலென்போற்
செய்தவரார்கீழ்மையினைச்செப்பலெவனெனவயர்ந்துசிந்தைநோவ
கைதைமலர்வருகைதனைக்கண்டனன்மற்றீதறைவான்கருத்துட்கொண்டு.

பொன்மலிந்தமடற்கைதாய்போதலெவணிருந்தெமக்குப்புகறியென்ன
கன்மலிந்தவிற்கொண்டுகண்டகர்வாழ்புரமூன்றுங்கரியவெய்தோன்
சின்மலிந்தமுடியிருந்துங்குப்புற்றேன்செய்தியிதுசென்றகால
மன்மலிந்தமாமலரோய்வரைந்தெண்ணல்வழுவதுகாண்வகுப்பதென்னே.

வேறு.

கடியேறியகைதையேநின்வரவான்
மடியேறியவென்மனமாழ்கலறும்
படியேபணிவேன்பயனீந்தருள்க
நொடியேயலையாமெனிறைகுவனால். (௬௩)

செற்றூர்புரமூன்றையுஞ்சேவிடைமேன்
முற்றுமுடிபெய்துறமுன்னகையா
விற்றூரவரீசனெனத்தெரியே
னற்றேனளியார்முடியாதரவால். (௬௪)

கண்டேவருவல்லெனக்கட்டுரையா
விண்டோடுவெகுண்டிவண்வந்தனன்யான்
றண்டேலெனையாளுந்தியான்றனிமை
கொண்டேனிதுகூறுவனீகுறியே. (௬௫)

வந்தான்முடிகண்டுவழுத்தியயன்
சிந்தாவிழுவேனொடுசேர்ந்தரநின்
பைந்தாதுகுபாதமலர்ப்பதியா
வெந்தாயிழிந்தானெனவேற்றுதியே. (௬௬)

ஈதொன்றையிணைத்திறையோன்முனநீ
மாதொன்றவழுத்திடினியான்மறவேன்
றீதொன்றுமிலைத்தெரியின்புகழ்வோய்
கோதொன்றெனைக்கூட்டுதிகொள்கவிதால். (௬௭)

என்னையிறைவன்முனம்யானெளிதே
கொன்னைவழுகூறிடிற்குற்றமெனத்
*தன்னையறிவானிதுயான்றரியே
னின்னையநிலைக்கநிகழ்த்துவனால். (௬௮)

என்றேயெணியேன்றிடமற்றதுதா
னன்றேயெனநான்முகனும்நவிலாச்
சென்றேசிவன்சேவடிசெப்பிவல
நின்றேபணிநேடியடைந்தனனால். (௬௯)

கரியாரெணிற்கைதையெனக்கழறிப்
பெரியேனெனநின்றிடுபெற்றிதனைத்
துரியானெதிர்கண்டுலகந்துவளத்
தரியானுரைதந்திடுவான்றனியோன். (௭௰)

வண்டார்மலரோய்வருவாய்வழிபோய்
தண்டர்மனுரைத்தனையாந்தணியோ
முண்டாமுலகுள்ளுனையேபணியுங்
கண்டாமணியாலயங்காண்கிலையால். (௭௧)

பொய்ச்சான் றுபுகன் றிடுவான்புகுது
மச்சொன் றுமிலாதவழுற்கை தாய்
வைச்சொன் றமுடித்திலனுன்வழுவால்
இச்சீயினிசேர்கதிநிற்கிலையால். (எஉ)

என்றானருஞ்சாபமதேற்றதனு
னன்றேயிலைகோயிலுநான்முகனுக்
கன்றேறகொடுகைதபுமம்முடியி
லொன்றுவொளியோங்குதலில்லையரோ. (எங)

நித்தனிவைகூறவுநீடியமால்
வைத்தம்புயபாதமலர்ப்பணியா
வத்தாவெனையாளுதியாளுதியென்
றித்தாரணிதன்னிவிறைஞ்சினனே. (எச)

பொய்த்தாயிலைபூதலமுண்டபிரான்
நித்தாவெனநின்னைநிகழ்த்துவனால்
சத்தாயிதுகொண்டுதலந்தொறுநின்
றெய்த்தார்பிழையெள்ளலைநீக்குதியால். (எரு)

என்றேயரனேகினனியாமினியே
நன்றேதிரிவேணியினன்மகிமைத்
தொன்றேய்புலமைக்கிசையத்தொடர
வின்றேதருவல்லினைதயேத்துவிரே. (எசு)

அரியயன்அடிமுடிதேடுபடலம்முற்றும்.

ஆகபடலம் ௬க்குச் செய்யுள் ௧௭௧.

ரு. திரிவேணிப்படலம்.

உலகமூன்றையுமொளியினால்விளக்கியபோழ்தாங்
கிலகுமைந்தலையதனிடையெழுந்தனவெழிலார்
தலங்களைந்தவற்றிடைநனிதயங்கியதாவில்
புலங்களைந்தையும்வென்றநீர்கேண்மினோபுகல்வேன். (க)

பிராசிதன்னிடைப்பிறங்குதற்புருடமென்றுரைக்குஞ்
சிராதலத்தினிற்சிவணியபூகயிலாச
மராவினுக்கொருமுடிதனிலணிபெறத்திகழுந்
தராதலத்தினிலொப்பிலையதற்கொருதலமும். (உ)

அவாசியிற்றிகழகோரமாமுகத்தினிலடைவே
பவாதிபந்தமேபறித்தருட்பகவனாமிராமன்
சிவாவெனத்துதிசெப்பியதலமதன்சிறப்பைத்
துவாதசத்தரும்புரிந்தொளிபெறுவர்தோத்திரமே. (௩)

பச்சிமத்தினிற்பணிந்திடுசத்தியோசாத
நச்சுமானனநண்ணிடுமாயிடைநவிலின்
கொச்சைநம்வினைகுலைத்தருள்கோகருணப்பேர்
பொச்சமில்தலம்புணரிசூழ்புவிதனிற்பொலியும். (ச)

உத்தரத்தினிலுயர்வுறுவாமதேவமென்
மத்தமாமுகமன்னிடுமற்றதிற்காசி
யித்தலத்தினிலுயிரதினிறுதியதெய்திற்
றொருத்துமுற்பவந்தொலைந்தனமுத்தியிற்றுலங்கும். (ரு)

மத்திமத்திலீசானமாமுகமதின்மகிழ்ச்சி
பொத்துதக்கிணப்ரயாகையாம்புவிபுரிதவத்தாற்
பத்திசெய்பவர்பவமெலாம்பண்பினிற்போக்கிச்
சித்திமுத்தியாதியவெலாஞ்சேருறக்கொடுக்கும். (சு)

தேவதேவன்றன்றிருவுருமைந்தகேத்திரங்க
ளாவதில்லையாங்கூறிடினனலுமச்சுகன்றான்
நாவலங்கொடுவருளியநன்றெறமையீன்றோய்க்
யீவதின்னமுண்டெனவவன்பதமலரிறைஞ்சி. (௭)

யாமியப்பிரயாகையையாமிதுகாறுந்
தோமகன்றிடக்கேட்டிலந்துனையுமற்றதன்ன்
னுமமாதியயாவையுநவையறநல்கிப்
பேமகன்றிடச்செய்கெனப்பெரிதுவந்தனனே. (௮)

மாற்றநன்றதாமைந்தனீகேட்டனமகிழ்ந்து
நோற்றதின்பயனுலவைநுமக்குரைதுணிந்தேம்
போற்றுசானவிபுலமகள்யமுனையேபொருந்து
மேற்றமல்கியவிடம்பிரயாகையென்றுரைப்பர். (௯)

அன்னதேதகவகலிடத்தமுதிழிந்தன்ன
பொன்னெடுங்கலைமகள்சிவேதையிற்சுரநதிபோந்
தன்னையேயெனவளித்ததிற்சேரலாலதனை
யுன்னிதக்கிணப்ரயாகையென்றுரைப்பரொள்ளியரே. (௧௦)

விதிக்குமாற்றலர்வேதியர்வேதமந்திரத்தைப்
பதித்துநெஞ்சிடைப்பரசினர்வழிபடப்பகல்செய்
துதிக்குநாயகன்றொல்புகழ்க்குலத்தினுக்கொருவன்
றுதிக்குமேதினிப்பகிரதப்பெயருடைத்தோன்றல். (௧௧)

புகலுமாதவக்கபிலனென்றேவரும்போற்றுந்
தகவுசான்முனிதணிந்திலன்சினந்தெரிவிழிக்கப்
புகலிலேமெனப்பொடிந்தடர்சாம்பராயினரென்
னிகலுடைக்குலப்பெரியரென்றேக்கமீக்கொண்டான் (௧௨)

எங்குலப்பெருங்குரவர்களிழிந்தனர்நிரயந்
தங்கிப்பற்பகலளித்தனன்றாரணிதமியே
னிங்கெனக்கிதுவழகிதாலழ்கிதுவினிநான்
மங்குமன்னவர்பீழையைமாற்றுவன்மரபால். (௧௩)

என்றுகொண்டனனிருந்தவக்கெண்ணினைனெம்மோ
யின்றுகொண்டனையுலகினையாற்றுதியென்ன
வொன்றுமாமதிச்சுமந்திரற்குரைத்தனனெழிந்தே
வென்றவண்டகைபோயினன்வியன்மலைச்சாரல். (௧௪)

திசைமுகத்தொருதேவனின்னருளினாற்கங்கை
விசைமுகத்தொடுவிண்ணிழிந்துறவிரைந்துன்னி
நசையகற்றினன்றவம்பலநாட்டினனள்ளார்
திசைபுருட்டிய திகிரியோன்றிறமெவன்செப்பல். (௧௫)

விடையெருத்தமீதிறைவனும்விரைந்துவந்தணுகிப்
படைமுருக்கியபார்த்திபநன்றுநின்றவப்பாங்
கடைவதென்சொலாயளிக்குதுமென்னலுமரசன்
சடையிற்கங்கையைச்சரித்திடவேண்டுமால்சரத. (௧௬)

மங்குலன்னவன்மழுவிடைப்பாகனைவழுத்திக்
கங்கைபெற்றுடன்களிப்பொடும்வருகின்றகாலை
சங்கையோட்டியசன்னுவின்சாலையையழிக்கத்
துங்கநற்றவன்றுனியொடுமருந்தினன்றுவட்டி. (௧௭)

பட்டபட்டதன்பாடெலாம்பணிந்தனன்முனிக்குச்
சொட்டமின்றியேசோகுடன்சொல்லினன்சொலவுந்
தட்டலின்றியே தணிந்துதன்செவிவழிதளத்தி
விட்டனன்னெரிவீடினோர்வீடுகண்டுவந்தார். (௧௮)

கடுக்கைவார்மதுகலக்கியீங்கிழிதருகங்கை
யடுக்கல்பற்பலபோழ்ந்தகன்கிடக்கையாமவனி
யுடைக்கையுற்றனளுற்றவருற்றவர்தங்கண்
மிடுக்கையாவையுமிசைந்துமீப்புகழுடன்மிளிர. (௧௯)

புலிங்கமேவுகட்பொறியுடைப்புனிதனைப்புகழ்ந்து
செலுங்கதிக்கயர்சிந்தையோர்சிறந்திடக்கங்கை
தலங்களார்ந்திடுதக்கிணம்புகுவல்யானெனலு
மலங்களற்றிடமன்னுகவென்றனன்மற்றும். (௨௰)

மணிகொள்முத்தையென்றுறுபெயர்புனைந்துமாநிலத்தோர்
பிணிகள்வீட்டுவான்பெயர்ந்தடைகங்கையாம்பேதை
யணிவகுத்திடவாங்குறுமதன்சிறப்பினையா
மெணிவகுத்திடக்கொண்டனமிதமுறக்கேண்மின். (உக)

கோழியோங்கியகொடியுடைக்குமரனும்புதல்வன்
வாழிவேட்டகம்வைகியேவான்மதப்புழைக்கைக்
காழிருத்துடன்கதிரமாத்துண்டமுங்கனவு
மூழிருட்டொகையொதுக்குயர்மணியினைபுகுத்து. (உஉ)

நடைமலைக்குழாநாகிளங்கன்றினைப்பற்றித்
தடைஇய நிற்கிலதாடுமாறிடத்தறுக
ணுடையகற்றிலாநொறிவயமடங்கலைநீர்த்துக்
கடைஇயவேகமாய்க்கடலொடுமிடல்தரக்கடுத்து. (உங)

தனக்குமாற்றவடாங்குறுதலமெனத்தணியா
மனக்கடுப்பினின்மங்குலுமாழ்குறுமாறு
நினைக்கவுந்தெறுநெடுவனநீர்வனமாக
வெனைத்துமார்த்தவணிரிதரவேகிடுமினிதே. (உச)

குருந்துயாகதிகொன்றைகாயாமலர்குல்லை
திருந்துவில்லமேயாதியதிரைகொடுந்திருகி
வருந்தவானிரையோட்டியேவழிவழியண்டர்
பொருந்திவாழ்தலம்புகுந்தளையுருட்டியேபொருது. (உரு)

ஆசினிப்பலாவடர்கரும்பூகமோடணியார்
பூசனைக்குறுபுதுமலர்ப்பூதவம்புடைத்துக்
காசினிப்பொறையணங்கருமேனியிற்களுலுங்
கோசிகத்தினிலொளிதருங்கோதிலக்குடிஞை. (உசா)

சாதகேதகைசாடியேசலசலப்பெண்ணை
மோதியாதரமுற்றுறமொகமொகமுடுகி
யாதிநாயகனடிபிரிவாற்றவார்கலியின்
மீதுபோகியதெனவுரைமிளிரமேவுறுமே. (உஎ)

மலருங்கொன்றைமாசுணமொடுதாதகிபுன்னை
குலவுபாடலங்கூவிளங்குராவுவாருழிஞை
புலவுநீர்கடையொருவறக்கொண்டுகைத்தலினு
னிலவுவார்சடைநிமலனைப்பொருவுமங்கீத்தம். (௨௮)

விசயவேலுடைவீரர்தமிருக்கைபின்விரவிப்
பசையகன்றிடாப்பருதிவாளொடுபணைதண்டங்
கசையகார்முகங்கம்புவாதியகடைக்கூட்டி
விசையின்வார்தலால்விண்டுவாமெனவுறும்வெள்ளம். (௨௯)

விரிமலர்ப்பதுமங்கண்மீவருதலான்விழையத்
தெரிபுநான்கவாமுகமெனுந்திசைதொறுஞ்செலலா
னரிபுகன்றிடவளித்தலானவணியையயனைப்
பொருவுநீர்மையதாமலிவுடையதப்புதுநீர். (௩௰)

பட்டிமைச்சொலும்வாயுடைப்பதட்டவாலிபர்போ
னட்டமுற்றிடநண்ணுபுநற்புலமியாவுங்
குட்டமாக்கியுங்குளங்குவடாக்கியுங்குதித்து
மிட்டம்போற்புரிந்தேகிடுமியலதவ்வெறிநீர். (௩௧)

கோட்டுவார்ணங்குத்தலாற்குவட்டினின்றிழியுந்
தோட்டுவார்மதுத்துவன்றியதனொடுகலந்து
மோட்டுமால்கரையோதலான்முறைமுறையறியு
நாட்டமில்லவர்போனடமாடியநறுநீர். (௩௨)

வேறு.

கள்ளுடைக்கமலப்போதிற்கயலடைதோற்றங்காசில்
துள்ளுநீரரம்பைமாதர்துலங்கயில்வேற்கண்காட்டு
நள்ளிரவகற்றுங்கூந்தனறியசைவலமேகாட்டும்
விள்ளுவாய்முறுவல்காட்டும்வெள்வளையீன்றமுத்தம். (௩௩)

மாந்தர்க்காமினத்தாலூறுமனவுணர்வென்றுகூறப்
போந்ததுகடுப்பநீர்மைப்புலந்தொறும்வேறதாகிச்
சாந்தமெட்டுணையுமில்லார்சார்தருகதியைமான
நீந்துறுவெள்ளஞ்சென்றநெறியலாநெறியின்மாதோ. (௩௪)

பைத்தலைநாகம்பாரேழ்பரித்ததன்பொறையாற்றுமற்
செய்த்தலைபுலகின்மாடேசிவணியகிடந்ததம்ம
கொத்துறுதலைவிரித்துக்குடக்கொழிகுணக்கிற்போந்த
தொத்தறலுவரிபுக்கதுயர்மணிமுத்தயாறு. (௩௫)

மலைபடுபொருள்களியாவுமறவர்பாலளித்துமாற்றுச்
சிலையயில்பேழைவவ்விச்செறிமுசுக்கலைகளெய்து
தலையணைசேக்குமள்ளர்தங்கையிற்கொடுத்துத்தள்ளிப்
புலைமணத்திமிலசேரப்போயதாழ்புணரியூடே. (௩௬)

குத்திரச்சிமையம்வீழக்குலமணிக்கற்றையோடு
சித்திரகாயங்கண்டுசினந்தெரிவிழிக்கச்சிந்தி
நெய்த்தலையுகிர்மாஞாளிநீந்திமான்பிணையைக்கவ்வ
முத்துடைவளைகளெங்கமூரிநீரடைந்தவன்றே. (௩௭)

புகைத்தசொல்லேற்றின்மாண்டபொன்னகர்ச்செல்வமீளத்
தகைத்தபாற்கடலினுகந்தறிவெனநட்டுப்பாந்த
ளுகைத்தனரசுரர்நாகருரமிறக்கடைந்தவோதை
மிகைத்ததோவென்னமள்ளர்மிகுதியான்மிடைந்ததார்ப்பு. (௩௮)

காண்டகுகயங்கடோறுங்கடைசியர்குரவைபூம்பு
மீண்டியவயல்கடோறுமெறிமணிக்குப்பைகொண்டு
தாண்டியதரங்கநீத்தந்தடைப்படத்தகையுமள்ளர்
வேண்டியகொண்டுமீதிவியத்தகுகடலுக்கீவார். (௩௯)

விலைபடுமணியுமுத்தும்வேண்டலர்வெறுக்கைமிக்கா
ரலைபடுமவனிமாதினரும்பயனடைவிற்கொள்வான்
றலைபடுதொழிலுக்கெல்லாந்தலைபடுதொழிலதென்னுங்
கலைபடுமறிவின்மேழிக்கடவுடன்மேற்கொள்வாரே. (௪0)

வேறு.

மோட்டிளந்திமிலுடைமூரிச்சேவிடை
பூட்டினர்பகட்டொடும்பொருத்திமாநிலந்
தாட்டுணைவலமுறத்தரிக்குமாரம்போ
லோட்டினரொய்யெனவுழவுதுன்னவே. (௪௧)

மள்ளர்கோல்கைக்கொளமனத்தைதவென்னிடும்
பொள்ளமில்கவையடிபொதுக்குமாமணி
கள்ளவான்மலர்கயவாயில்பெற்றிடுந்
துள்ளியசேலினந்துவைக்கும்பண்ணையே. (சஉ)

வளையொருபுறமுழவயலிற்றங்கிய
களைமடிதரவங்கனியச்சேதகந்
தளையவிழ்நறுமலர்தணியத்தாடுவைத்
திளையருமுழவரேரிகலிழியங்கணும். (சங)

பறம்புறப்போக்குநர்சிலவர்பான்முளை
நிறம்புறவித்துநர்சிலவர்நீர்வய
லுறம்பெறவூட்டுநர்சிலவரோகையின்
மறம்பலபேசுநர்சிலவர்மள்ளரே. (சச)

பரிதலையசையகொய்புளையிற்பாவிய
விரிதலைநாறுசெய்முடியைவித்திடச்
சரிதலையின்றியேசமனநாட்டுவர்
பெரிதலைநிகர்குழற்பேதைமார்களே. (சரு)

வாக்குறுதேறலைவளைந்தவீக்குலம்
போக்கினர்மாந்தியேபொருந்தகில்லரா
யூக்கியமனத்தொடுமுணர்வைநீக்கினர்
தாக்குவர்கைவளைதகரத்தாமரோ. (சசு)

தாலியைவீக்குதங்கணவர் தாவியே
சேலையைவீக்கியேசெறிக்கச்சென்றவர்
மாலியையபகன்றிடமறித்தும்வான்களை
கூலியைவேட்டிலர்குலவக்கட்டுவார். (சஎ)

புரிவனயாவையும்போகலின்றியே
தெரிவனதெரிந்துதாந்திமிரவாற்றினர்
விரிவனசாலியைவிழையத்தாயினும்
பரிவினிறைக்குவார்பகரப்பண்பினே. (சஅ)

படிதலைபயிரடைபசியுகூழெலாங்
கடிதலையரவினங்கான்றகுட்டிக
ளிடிதலைவாரெனுடுமிகலியேயென்றன
வடிதலைநிமிர்ந்துநின்றழகிற்றன்னவை. (௪௯)

இனத்திழிதகவினரிடையிற்செல்வமே
யனைத்தெனவருங்கதிரமன்றவூனமங்
கெனைத்துமேயின்றியவிற்கணுற்றவர்
தனத்தினேர்தகநனிதணிந்துகாய்த்தவே. (௫௦)

ஐந்தெனும்புலத்தினாரரவுண்குபு
புந்திகொள்விளைபுலம்புகுந்துமள்ளர்க
ளந்திரமெனவரிந்தேதம்பலின்றியே
யந்தில்சேர்த்திடுவதோரமலைத்தெங்கணும். (௫௧)

தெழிப்படைநெற்குவைதிணரப்பண்டிகொண்
டழிப்படைவில்லதோரகலுள்ளாக்குவர்
விழிப்படைகாத்திடாவிளைபுட்டன்னதோர்
செழிப்படைநாடுநாஞ்செப்பவல்லமோ. (௫௨)

நிலந்துறுபயனெலாநெறியினெண்ணினர்
கலந்துறமுதிரையாதியகளெல்லவும்
வலந்தனர்கொண்டதம்மனையின்வாழிய
குலந்தரக்கூட்டுவர்குதிரின்முந்தவே. (௫௩)

ஆலைவாய்ச்சாற்றினையட்டதூமமென்
சோலைவாய்ச்சேறலுஞ்சுலவுநீர்த்திரை
காலைவாயருந்துகார்முகிலென்றுன்னின
நீலவாஞ்சிறகரைநெகிழ்க்குமஞ்ஞையே. (௫௪)

இசையளிதரவெழீற்காளகண்டமே
வசையறுபணுவலைவகுக்கவஞ்சிக
ணசைநனியெனநடநண்ணலுற்றன
வசைவிலவடவிகளமர்ந்தபுட்குலம். (௫௫)

மண்ணுறுபுனல்கொளவளர்ந்ததாழைகள்
விண்ணுறுபுனல்கொளவிளைந்ததோற்றமே
தண்ணுறுமொருவருண்டணியவுண்டவர்க்
கெண்ணுறுபகைவழியேகலொக்குமே. (௫௬)

தேனுலாம்பொதும்பரிற்றேவர்போந்துத
மூனுலாமசதியையொழிப்பருமெனக்
கானுலாமலர்தொறுங்கரியவண்டுகள்
வேனிலான்வெற்றியைவிழையவிள்ளுமே. (௫௭)

கனைத்திடுமேதிகள்கயங்களிற்புகூஉ
நினைத்திடக்கன்றினைநெறித்தமாமடி
தனைத்தடவிதழ்க்கமலங்கடாம்பிழீஇ
யினைத்தெனப்பாற்கடலிழியும்பாலதே. (௫௮)

இரவலரின்மையாலீவதில்லையால்
கரவினரின்மையாற்காப்புமில்லையால்
பரிவினையன்றியோர்பகையுமில்லையால்
பிரிவினையன்றியோர்பிணியுமில்லையே. (௫௯)

இன்னனவளங்கணீங்கேதருந்தெய்வமா
நன்னதிப்புனலொடுநண்ணும்புண்ணிய
தொன்னதிவளமையுந்தொகுப்பலோர்திரால்
தன்னெனுமுரையினைத்தணந்தசெல்வரே. (௬0)

வெண்கலைவெண்பணிவெண்சலசத்துறு
பண்டலைக்கோடுகொள்பனுவலாட்டிதன்
கண்கலுழ்வுற்றனள்கமலநான்முகற்
கெண்கொளவீதினையியம்புவாளரோ. (௬௧)

உமையொருமைந்தனையுவப்பினீன்றனள்
கமைவருமுலகுநற்கதியையுற்றிட
விமையவர்தளபதியென்னச்சூர்முத
லமைவுறவென்றனனவாசிக்கேகவே. (௬௨)

அன்னவண்மாற்றவளருள்செய்கங்கையென்
றுன்னிடவுலகினிலுதித்துப்போயினள்
பொன்னவள்காமனைப்புகலவீன்றனை
ளென்னினுமேழைகளினியுண்டாவரோ. (௯௩)

கோண்டவர்பலமலாற்குணிக்கின்மங்கையர்க்
குண்டுகொலுரணிதையுணரகில்லிரே
யெண்டிசைவிபுலையயீன்றுமென்பயன்
தண்டிடேனுவியைத்தணப்பல்காண்டியே. (௯௪)

என்றழிதரவயனெஞ்சலெஞ்சலை
பொன்றிடினன்னமேபுவியினென்பெயர்
நின்றிடுமோநினைநினைத்தவண்ணமே
யொன்றினகேளுணர்ந்தீவலென்னலும். (௯௫)

இருந்தவறேன்றனையென்மீதன்பினை
பொருந்தவென்மனமலர்புகுந்தநாயக
வருந்தலைநதியுருவழுத்தப்பெற்றியான்
திருந்தியபுவியிடைத்திகழுவேனென. (௯௬)

நன்றுநீவேண்டினைநளினக்கிள்ளையே
கன்றுதல்விடுமதிகானமண்டிய
சென்றனைசிந்துவாய்ச்செறிதியென்றலு
மன்றவள்போயினளறிதிர்நீர்மையே. (௯௭)

விசித்திரகிரியெனும்வேதண்டம்புகூஉ
வசித்தெலாமகன்றிடவருளைமீக்கொடு
நசித்திலடெய்வமாநதியென்றேவரும்
புசித்திடச்சென்றனள்புவியின்மீதரோ. (௯௮)

கன்னியென்றகந்தையாய்க்காத்தியாயனன்
மன்னியசாலையமடுத்துமற்றது
துன்னியசிருக்கொடுசிரவந்தூக்கியே
பன்னியபோயதுபணிதலின்றியே. (௯௯)

கோதித்தருந் தவன்சொலுங்குணத்தைப்போக்கினை
மதித்தலைதோயமாய்வருதன்மாற்றினை
னிதுத்தலைசுமந்தனையேகுகென்றலும்
விதிர்த்தனனெஞ்சொடுவிளிவைமுன்னியே. (௭௦)

ஐயகேள்சாபநீயறையவஞ்சினே
னுய்யவேவிதியினியுதகமாகுவான்
செய்யனேசினவலையெனலுஞ்சிந்தையாற்
றையலாய்நின்றவடனிமையெண்ணினான். (௭௧)

விதிபுணர்தேவியென்றுணர்ந்துவேதியன்
னொதுயலைப்போக்குவானூலின்செல்வியே
நதியெனச்சலசையாநங்கைமுத்தையிற்
பொதிபுநாட்போமதிபுணர்ந்தங்கென்றனன். (௭௨)

வேறு.

பின்னமுற்றிடுதன்செயன்முடித்தனன்பிறகு
சொன்னமாதவச்சனகனேயாதியர்சுழன்று
அன்னைமாழ்கலையகற்றுதல்தனையருக்கடுத்த
தென்னப்புக்கனரிருங்கடன்முகட்டினிலொருசார். (௭௩)

அஞ்சலித்திடுகையினரார்த்திமீமிசையே
விஞ்சதோத்திரம்விழைந்தனர்விரிந்தபாற்கடலிற்
றுஞ்சவாலிலைதொழுதிடத்தோன்றினைதுரிசில்
கஞ்சவீபலமலர்தருகருமுகிலென்ன. (௭௪)

இருசுடர்த்தனிக்கடவுளரிருபுறமிலகு
மரகதத்தனிக்கிரிமலர்மாதொடுமருவி
யுரகமீமிசைக்கிடந்தனைவொளிர்மணிமகுடச்
சிரமசைத்தருள்செவ்வியோய்செவியுறக்கேட்டி. (௭௫)

வேறு.

நெறிநின்றதவஞ்செய்யும்நீடுமறையந்தணர்கள்
வெறிநின்றமயக்கமெலாம்வீடுவான்வியன்மனத்தா
லறிநின்றபொருளதுவாயயனின்றோர்க்கறிவரிதாய்ப்
பொறைநின்றஞாலத்துப்பொன்றாதோய்நீயன்றோ. (௭௬)

அண்டமெலாமுண்டாய்நீயளித்தன்றிக்காத்திடுவான்
கொண்டலெனநின்றாய்நீகுறிக்கின்றவெப்பொருட்கும்
பண்டையிறையானாய்நீபரவுமறைதேடரிய
தண்டலிலாவறப்பயனீதகவென்னதகவேயோ. (௭௭)

நிறைதுளும்புந்துழாயலங்கனகுமணித்தோட்புறமசையச்
சிறைதுளும்புங்கலுழன்மிசைச்சேவிக்கத்தேவரெலா
முறைதுளும்புமாதியெனவும்பலுரந்தழையவிசைக்
கறைதுளும்புந்திகிரிவிடுங்கடுப்பென்னகடுப்பேயோ. (௭௮)

வேறு.

வானாதிபூதங்கள்வாயவிரித்தவைநீ
யானேயெனமறைகளார்க்குமகன்ஞாலக்
கோனாகிச்செய்யுங்குற்றேவலுமாகித்
தானேபரமாய்த்தயங்குந்தனிமையனே. (௭௯)

என்றாங்கிணையபலவேத்தியெழின்மறையோர்
நின்றாரிடர்தீரநேர்ந்தான்கலுழன்மிசை
யொன்றாத்தவமுடையோர்க்குள்ளுறைதனதா
மென்றாணிணையாருமில்லாவிறையோனே. (௮௰)

வேறு.

மலங்கடிநெஞ்சுடைமறையவர்குழாஅங்
குலுங்கினர்தோத்திரங்குழையச்சொற்றனர்
நிலங்கடைநின்றனர்நிமலன்றண்மிசை
யிலங்குதஞ்சிரமுறவிறைஞ்சினாரரோ. (௮௧)

எங்களையீன்றவனிடரின்வைகிடப்
பங்கமில்மொழிபெறுபான்மையாறிய
வங்கணன்செவியுறவடைவிற்சொற்றனர்
புங்கவனன்றெனப்பொறியைநோக்கியே. (௮௨)

என்மகிழ்மார்பிருந்திறைஞ்சுமன்பனை
நன்மனங்கொண்டவர்நடுங்கனீக்கிடுந்
துன்மனங்கொண்டிடாத்துணைவிநீபெறு
நன்மகன்மனைவியினவிவைப்போக்குதி. (௮௩)

என்னலுமேழிருபுவனமீன்றிடு
மன்னையுமருளெனவஞ்சலித்தனள்
பொன்னியல்சுதர்சனப்பொறையிற்புக்கனள்
கன்னிநன்னீத்தமாய்க்கடிதியங்கினாள். (௮௪)

மூன்றொடுமொன்றெனுமுறுக்கவிழ்ந்திடு
தேன்றுளிமலர்கொடு திருவில்வீசிடச்
சான்றவர்பழிச்சிடுசலதிசுற்றிய
நோன்றிடுபுவிக்கணேநோன்மைசாலவே. (௮௫)

தான்வளர்கடல்புரைதகுநிறங்கொடு
கூன்வருபிறைநிகர்கோட்டுக்கோலமா
கான்வருகழலடிகதுவப்போற்றிய
தூன்வருபிறவிநோயொளிக்கவுந்தியே. (௮௬)

நீட்டுகைம்மாவுரிநிமலனார்துறை *
பூட்டிய விருகரைபொருதுதோய்ந்தவர்
சேட்டைசெய்பவமெலாந்தேய்த்துச்செல்கதி
காட்டுறும்பான்மையிற்கஞலுநீரதே. (௮௭)

அள்ளிபுண்டகுதியதசனியெஞ்சிடு
கள்ளிகொள்காட்டகங்கரந்துகாறிய
கொள்ளிகொள்தலையுடைக்கொதிக்கும்பன்னகம்
பள்ளிகொண்டன்னதுபனுவலார்ந்தது. (௮௮)

வானிடையரம்பையைவழுவுகூறிய
வூனுடைமாதர்களுலவித்தோய்தலாற்
கானடைமான்மதக்கலவைச்சேறொடுந்
தானடைவெள்ளநீர்தருக்கிச்செல்லுமே. (௮௯)

---

* ௧. காலியானூரென்னும் ஆதித்துறை. ௨. திருவாலந்துறை. ௩. திருமாந்துறை. ௪. ஆடுதுறை. ௫. திட்டகுடி யென்னும் வசிட்டதுறை. ௬. திருஅறத்துறை. ௭. பிலாந்துறை யென்னும்முடவன்துறை.

மருவழிமதுமலர்மடியமல்கிநீர்
வருவழிப்பொருளினைவவ்விவார்தலாற்
றிருவழிகாமியர்செல்வந்தேக்கிய
கருவழிமனமுடைக்கணிகையொக்குமே. (௯0)

அஞ்சிலம்பெனநனியரற்றுமோதிமங்
கஞ்சமென்மலர்தொறுங்காணுங்காட்சிய
விஞ்சியவுருக்கொடுவேதன்காதலி
தஞ்சமென்றடைந்திடுதன்மைமானுமே. (௯௧)

சுழித்திடுமழித்திடுஞ்சுலவுநீர்த்திரை
தெழித்தனவேகிடுஞ்செலவைத்தேறிடிற்
பழித்திடப்பிறப்பதுமிறப்பதும்பகர்ந்
தொழித்திடாசென்மமென்றுணர்த்தலொக்குமே. ()

கண்ணிடைகழைமணிகரியின்கோட்டுதிர்
தண்ணிடைமணிகளைத்தழுவிச்சார்தலால்
விண்ணிடைமீனினம்விழுங்கிமஞ்சின
மண்ணிடைப்பொழிந்ததைமானும்வெள்ளமே. (௯௩)

உருண்டனமலைமுடியுகைத்தயாளிகள்
தெருண்டனபாய்ந்திடுந்திண்மையற்றிடும்
மருண்டனயானைகண்மகரநீரிடை
யிருண்டனநிழலொடுமெண்ணும்பாலெலாம். (௯௪)

படிவழியடைந்தனபாதலம்புகூஉந்
தொடுவழியீதெனத்தொடரும்பண்பது
செடிவழிப்புள்ளொலாஞ்சிலம்பல்செல்வரின்
கொடைவழியிரவலர்கொள்கைபோலுமே. (௯௫)

வேறு.

அமிழ்துவந்தனளின்னணமருகுறவணியார்
தமிழ்தெளிந்தவரன்பெனத்தணிவிலடகவாங்
குமிழ்தொடர்ந்திடக்கூடினள்முத்தையென்கொடியுஞ்
சிமிழ்வருந்தெனச்சேர்ந்தனள்வாணியுஞ்சிறந்தே. (௯௯)

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1

இன்னவாறெழின் மூவருநதியெனவிணங்கும்
பொன்னவாமிடம்புணருமுக்கூறும்பினையறுத்தோர்
பன்னும்யாமியப்பணிபிரயாகையாய்ப்பகர்வர்
தன்னைநேருறுதலம்பிறவில்லையித்தரணி. (௩௭)

இத்தலத்தினிலிரணியகருப்பனென்றுரைக்கும்
பைத்தமாமலர்ப்பண்ணவன்பற்பகல்பணியா
நித்தனைந்தநிருத்தனங்கண்டகமகிழப்
பத்திமீக்கொடுவரம்பெறுகாதையைப்பணிப்பாம். (௩௮)

திருவேணிப்படலம் முற்றும்.

ஆக படலம் ௫-க்குச் செய்யுள் ௨௩௧.

௬. பிரமன் வரம்பெறு படலம்.

வெள்ளிவேதண்டமிசையொருஞான்றுவிரைமதுவேட்டளிவிளம்புந்
தெள்ளியபாடற்றேன்மொகுகுதுளவத்தெரியலார்திரள்வரைப்புயத்து
வள்ளலும்வழுத்துவரைதருமகளும்வணங்கினர்வாழ்த்தொடுபரவி
யுள்ளநெக்குடையவுணர்வினைக்கடந்தவுயர்பரம்பொருணடங்கண்டார் (௧)

முண்டகக்கிழவன்முன்னினனுணர்ந்துமுப்புரமுறுக்கியநகையோன்
றண்டையார்பதுமத்தாணடங்காணுந்தாமிலன்றமியனுக்கென்ன [னே
வுண்டெனலுஞற்றுமுறைப்பருந்தவத்தினொழிவறுபெருமையென்னின்
கண்டலாலெனதுகருமம்வேறில்லைகயிலைசென்றடைகுவல்கடனே. (௨)

மூசளிதுவைக்குமுளரியந்தவிசின்முனிவரன்முனிகணமூசத்
தேசுடையாழோர்தேவர்கள்முதல்தெய்வதம்தேசெடுத்தியம்ப
வீசுவெண்சிறைப்புள்ளினமேற்கொண்டுவிடையவன்வீற்றிருந்தருளும்
வாசவண்பொதும்பர்வளவியகயிலைவரையினைக்கண்டுகண்களித்தான். (௩)

வெண்ணிலாவழித்துப்பூசியதுறழும்விரிகதிர்ப்புண்டரக்கீற்றுப்
பண்ணுலாம்பணையாழ்முனிவர்பல்லாண்டுபகர்ந்திடப்பனிமதிமிலைச்சுங்
கண்ணுலாநெற்றிக்கடவுளேகணக்கின்கருதுனுஞ்சிவகணமாகித்
தண்ணிலாவிரிக்குந்தடவரைமிளிரத்தயங்குதங்கரங்களைமுகிழ்ப்ப. (௪)

மரகதம்வித்திமுளைத்தனமானும்வள்ளிலைக்கொடிகளேமன்னி
யரதனம்பூத்தெனமலர்ந்தளிகளஞ்சரிதஞ்சொலவசையா [வான்
வரதனெம்பெருமான்வரையிடைக்கிடத்தலவல்வினைப்படரழித்திடு
கரதலஞ்சிரமேற்கவித்திடுமடியார்கழல்களைப்பணிவனபோலும். (௫)

தரங்கள்வேறில்லாத்தனிவரைக்கயிலைத்தருவின்வளமெடுத்துரைக்கி
னிரங்குவெள்ளருவிபெறிமணிக்காந்தியிகல்செயவிருளெலாந்திரண்டு
மரங்களாயுருவைமாற்றினவாகிமான்மழுக்கரத்துடையெந்தை
வரங்களையோம்புமடியவர்வதிவான்வழிவழிச்சிறந்தனமானும். (௬)

அடுக்குறுமண்டமிவையெனச்சாலுமணிமணிக்கோபுரநெருங்கி
மடுக்குறும்புவனமூன்றையுமொருங்கென்மைந்துடைமரகதமிழைத்துத்
தொடுக்கியகதவத்தோரணவாயிற்றுலங்கிடத்துணைசொலவறியா
மிடுக்கியல்விமானமண்டபமிகுத்துமிளிருமம்மேதகுகுன்றம். (௭)

அள்ளுமூண்டவிர்ந்தங்கனிலமேகொண்டுமரனிருசரணதாமரையை
யுள்ளினரியமமாதியவிழைநொழிவருசிவகதிமுன்னித்
துள்ளலிலக்கந்தாங்கியேதயங்கத்தருவுரிசடைமுடியினராய்ப் [வார்.
பொள்ளமின்ஞானப்பொன்விளக்கெங்கும்பொலிந்திடவேற்றினர்புரி

இத்தகுமுனிவரெண்ணிலர்குழுமவிருடபுமெழிற்சனற்குமார
ரத்தமில்வாமதேவர்ஜாபாலியருண்மிகவஞ்சலிபுரியும்
பத்திசெய்மின்னற்கொடிகளுமிரவிபனிமதிக்காந்தமும்பதித்துப்
பொய்த்தமாமாயைபோதவொட்டாதபொன்மதிலுடையதுக்கயிலை. (௯)

பண்ணவிர்முனிவரிருவர்யாழ்பகரப்பரிவொடுமமரர்கள்போற்றக்
கண்ணவிர்முழவமாதியவியங்கள்கறங்கிடக்கணங்களேயார்ப்ப
வண்ணவண்பாடல்வழங்கவிஞ்சையரேவரிசைபல்லுருத்திரர்சூழக்
கண்ணுதல்வைகுங்காட்சியெவரேகணித்திடவல்லவர்கருதில். (௰)

வேறு.

எங்குமாயாவுமாகியெண்ணுவாரெண்ணத்துள்ளாற்
பொங்குறுமமிழ்தவாரிபொலிந்தருள்புரிவானுங்குத்
தங்குறுவிமானச்சோதித்தனிப்பிழம்பதனைநோக்கி
யங்குறுமடமாரெல்லாமணிவிழியிமைத்துநிற்பார். (கக)

விரிந்தபல்லுகமியாவும்விழையவைந்தொழினடாத்திக்
கரந்தருள்புரிவானந்திகடுத்திடுமேனிகொண்டு
திருந்துயர்மணிகளோங்குந்திணிபொலன்றவிசின்ஞானக்
குருந்தெனவைகுமெங்கோன்குறிப்பொடுங்குயிற்றிநிற்பார் (கஉ)

ஆறொடுகொன்றையாரேயவிர்கலைமதியும்பாந்த
ணூறிடப்பிணித்தமௌலிநங்கையோர்பாதிமேனி
நீறணிநெற்றிவாகைநிலவுநேத்திரமுநீல
மூறணிகண்டத்தெந்தைதயொழிவிலனுணர்வின்மேலான். (கங)

கோடுவரியதளைவீக்கிக்கும்பியினுரியைப்போர்த்தே
விடுகனன்மழுமானேந்திவிழையமுத்தலைச்சூலமெகொண்
டடுவரியுரகஞ்சான்றவாடுபொற்குழையும்பூண்ட
தொடுகழல்வரிந்தபாதத்துணைமலருடையதொல்லோன். (கச)

வில்லிடத்தொடுத்துத்தூக்கும்விளங்கெழின்விதானத்துள்ளே
யல்லிடையிரண்டுதிங்களணைந்தெனக்குடுமிக்குஞ்சத்
தொல்லிடக்கோடையஞ்சியுமிழ்கதிர்பரப்பும்வட்டத்
தெல்லிடர்ப்படுத்தகாழ்கொளிணைமணிக்கவிகைநாப்பண். (கரு)

கூலமணிகுயிற்றுவாயிற்குஞ்சரமுகத்துவள்ளல்
வலநிமிர்வயிரவொள்வேல்வானவன்வண்மைநந்தி
புலநெறிபிருங்கியாதிபுங்கவர்புணர்ந்துகாக்கச்
சலநிமிர்சடிலத்தண்ணல்சார்ந்தருள்புரியுமன்றே. (கசு)

உழையபன்முனிவர்நாகரோய்விலருய்ந்தோமென்று
தழையதண்பனிக்காலீர்க்குந்தனிமணிக்கவரிதாங்கி
மழையமான்மதஞ்சாந்தோடுமதுமலர்கொண்டுதூவி
விழையபூந்தாமமாதிவிரித்தனர்விள்வார்நாமம். (கஎ)

மண்டலநேமிவையமாதிமற்றுலகுக்கெல்லா
மெண்டகுமிறைவன்றன்னையே தநீங்கிருநான்கென்னுங்
கண்டலமுதனாற்கண்டுகளிப்பெனுங்கடலுண்மூழ்கி
முண்டகமறையோன்வாழ்த்தமுறைமையின்முன்னினானல். ()

வேறு.

அனகவன்புடையடியவர்க்கானந்தமளித்து
வினைகவிழ்ந்திடவீறருள்சுரந்திடுவிமல
கனகமஞ்சரிகடவுடங்கடவுளேகதியே
நனைகமழ்நறுங்கொன்றையார்வேணியோய்நமவே. (௧௯)

அசத்துநீங்கியவறிவினுளானந்தவுருவாய்
நிசத்துநின்மலநித்தியமுத்தர்தம்நிதியம்
புசத்துநாயகன்மதியழல்பொருந்துமுக்கணு
வசத்துவைத்தருள்வைதிகநின்பதநமவே. (௨௦)

மோனமுத்திரைமுளைத்தருள்கரத்தினைமுதலீ
றானவில்லைநின்னருளெனவிழிதருமருவி
வானவெள்ளியம்வரைக்கிறைவகன்மங்கலனே
ஞானநாயகநாண்மலர்ப்பதத்துணைநமவே. (௨௧)

பராபரையெனும்பாவையர்பணிந்திடப்பதியாய்
நிராமயன்னெனநிலவுறுநின்மலக்கொழுந்தே
யராவணிந்தருளண்ணலேயருங்கடுமிடற்றோய்
விராவுதொல்பதம்விழைந்தருள்விண்ணவநமவே. (௨௨)

பருதியாயிரங்கோடியிற்பரவுமெய்ப்படிவ
சுருதியாவையுந்தொடரொணாச்சுயம்பிரகாச
கருதிநால்வருங்காண்குறக்கல்வடமெழுந்தாய்
வருதியென்றருள்வள்ளனின்வண்பதநமவே. (௨௩)

இன்னவாறிறைபிருங்குணமியாவையுமியம்பிச்
சொன்னநீர்மையிற்றொழுதனனின்றிடச்சுயம்பு
நன்னர்நீவிழைவுற்றதென்னல்குவனவிலா
யென்னநான்முகனிதயங்கொண்டியம்புவனிறைஞ்சி. ()

தேவதேவனைதிரிபுரநாசனைதிக்குக்
காவலோம்புறுங்கடவுளைகாசினிபடைப்பும்
மேவரும்பிதாமகனெனவிறைஞ்சிடுமிளிர்வுங்
கோவரும்முனதருளினாற்கொண்டனன்கோவே. (௨௫)

ஒருவகில்லதாமுயர்பெறும்பூதங்கடோறு
மருவமாயமர்ந்தடியவர்க்கருண்மிகவருத்துந்
திருவநின்னடித்திருநடங்காண்குறுந்திறத்தை
மருவவேண்டினன்மற்றெதும்வேண்டிலன்மகிழ்ந்தே. ()

வேறு.

படைப்பாற்றுந்தொழிலெமதுபகாருளால்பரிந்துபுகழ்பரக்கப்பூவி
னிடைப்பாலங்கிருந்தியற்றுமெழிலுன்குமுகமுடையாயியம்பக்கேட்டி
புடைப்பாற்றும்பொழிமதுரப்புனல்பரந்துதிரிவேணிபுணருமபாங்கர்
கடைப்பாலாம்வினைகடக்கக்கருதினையாங்கொருவேள்விகமழச்செய்வாய்.

நினைவகற்றுநின்மலத்தினீண்முடியிலெழுந்திறைநித்தியத்தைக்காட்டும்
புனைவகற்றும்பூம்பொதும்பர்புனல்வழியும்புகல்கங்கைபொருந்துகாசி
தனைநிகர்க்குந்தக்கிணமாந்தனில்பிரயாகைத்தலத்தைத்தரிசித்தக்கால்
தினைநிகர்க்கும்வினையளவுந்தெரியாமற்போயொழியுந்திகழச்சேர்வாய். ()

கைந்நாகங்காத்தளித்தோன்கடல்கடைந்தவரையினொடுகதிர்கள்சூழ
முன்னாகம்பிணித்தடையார்மூவெயிலுமுனிந்திடயாமுனையிற்கொண்ட
வந்நாகமன்றியெமதருண்மல்குமன்புடையாரடர்ந்துவாழும்
மைந்நாகமலர்கயிலைமாண்பினொடுமப்பதியைமதிக்கலாமே. (௨௯)

தருவரம்பினீயியற்றுந்தனியாகமுடிவினிலியாந்தழையச்சார்ந்து
புகுநரம்பின்புலமறியும்பொறைமுனிவர்விரலூழ்த்துப்புகழ்ந்துபாட
தொகுமரம்பையொடுமமரர்தோன்றினரங்குய்திபுறத்துணைத்தாடேக்கி
வெகுவரங்கள்பயிலநடம்விளைக்குதும்யாங்கண்டங்குவெளிறுதீர்க. (௩0)

வேறு.

பின்னருநான்முகன்பேணுமப்பதி
நன்னலமருள்கெனநவையிற்றீர்ந்திடு
பன்னரும்பதியியல்பகர்தன்மேயினுன்
கன்னியோர்பங்குடைக்கடவுணத்தனே. (௩௧)

பிரமன் வரம்பெறு படலம் முற்றும்.

ஆகப் படலம் ௯-க்குச் செய்யுள் ௩00

எ. நந்திவரம்பெறு படலம்.

போற்றவருமாமலரோய்பொன்னாடர்பூமனொடு
மேற்றவரமிக்குடையானிகற்றாரகற்கஞ்சாச்
சாற்றவருந்தம்பதவிசாயச்சகந்துதிக்கு
மேற்றமுடையிக்கயிலையெம்மையடைந்தாரால். (க)

ஆயிடையிற்றக்கனணிமாமகளஞ்சிப்
போயொருவவொல்லோம்புடையாலடியமர்ந்தே
தீயவடைகில்லாத்திருநான்முனிவர்க்குத்
தூயவறநெறியைத்தோன்றவருளானின்றேம். (உ)

ஒழியாப்பிரமநிலையுங்கிருந்துகாட்டுறயா
மழியாவமரரெலாமறுமாமுகற்றந்து
பழியார்பகைகடியும்பான்மையெவனென்றே
செழியார்மலர்வானிச்செம்மறனைநினைந்தார். (௩)

ஏவொன்றான்வாலியிகன்மார்பங்கீண்டவன்றன்
றாவொன்றிளையோற்குத்தொல்லரசுகைதந்தோன்
தாவொன்றவீன்றதனிமகனுமாங்குற்று
வாவென்றநீவிர்வழங்குதிராலென்னென்றான். (௪)

எம்பொருட்டாலீசன்செயேதமிலாமோனமற
வம்பலராம்வாளிபலவாங்கிவலம்பெறுகென்
றும்பரெலாங்கூறிடலுமுய்யேனிதுசெவிவா
யம்பெனலாயிற்றந்தோவாழ்ந்தேனருநரகே. (௫)

என்னைச்செவியடையாவென்மாட்டுநுங்கட்குப்
பன்னாட்சினமிருந்தபான்மையெனயானுணர்ந்தே
னன்னாட்கொண்டன்பானவின்றீர்மன்னன்றிதுபோ
லுன்னார்பிறரையாவொட்டலர்களானாலும். (௬)

பணியார்பரமூன்றும்பாழ்படுத்தான்பண்டைவிடந்
துணியாவருந்தியருடொல்லோன்றொடுகழலாற்
குணியாப்பெருஞ்சினத்துக்கூற்றையுதைத்துவிதி
தணியாமகன்வேள்விதாக்கினவன்றான்கண்டீர். (௭)

அன்றோன்றனையெதிராவாடலலரம்பு
வின்றாண்டெறித்தெய்யில்வீதல்சரதம்மே
கொன்னேகுழகனருட்கோலேன்குலைந்திடலா
லென்னையிருந்தபலனென்கணியம்பிடுவீர். (அ)

வேறு.

பிரிவறவாணும்பெண்ணும்பிரசமாமலர்கொண்டெய்து
விரகமதூட்டிஞாலம்விளங்குறவிழையும்வில்வே
ளுரமறநடுங்கச்செற்றவுருவையெலாமுணர்ந்தங்கும்பர்
பரமுனக்கையவென்னைப்பணித்திடன்மேயினாரே. (கூ)

தம்பொருட்டொன்றுகோலாத்தனிப்பெருஞ்செயல்கள்மேலோர்
தம்பொருட்டாகுமென்றுதக்கவருரைகள்பல்ல
வெம்பொருட்டின்றுசென்றேயிறையவன்மோனநீக்கி
லும்புகழ்தலைநின்றோங்கியுலகெலாமொளிறுமாதோ. (கo)

தென்றலந்தேரிலேறித்திமிரமதூழ்க்குஞ்செய்ய
வன்றலிற்கதிரைவேட்கும்வளரரவிந்தமென்னும்
பின்றலில்கணைகளேவிப்பிஞ்ஞகன்பிறங்கலீன்ற
கன்றலில்கன்னிதன்னைக்கலந்திடப்புரியினாங்கே. (கக)

ஒப்பறுபிரமந்தானேயோங்குருக்கிளரத்தோன்றிச்
சுப்பிரமணியனென்னுஞ்சூழ்பெருநாமஞ்சூடித்
தப்பிதச்சூரைவென்றுதருமலர்ச்சரணந்தந்தே
யிப்பதமெங்கட்கீந்தங்கெறுழ்வலியருளுமன்றே. (கஉ)

என்றனராகவிண்ணோரிணையணிமாரவேளும்
நன்றிலைதீதேயாகநலிந்தமையடைந்தோர்க்கொன்று
பொன்றியேயெனினுமீதல்புகழிடைப்பட்டதன்றே
நின்றிடேனினியானீவிர்நிகழ்த்துதனின்மினென்றே. (கங)

மூவெயினகைத்துச்செற்றமுதல்வனைமுக்கணனைத்
தீவெயில்காணச்சாம்புந்திகழ்மலர்கொண்டுவேறல்
நாவெயிறணவச்செப்பாநாகிளங்கிழவிபோன்றுப்
பாவியல்பொருளைத்தேற்றும்பண்பதேபோலுமம்ம. (கச)

சீரடங்கியனோன்றுரைச்சிந்தையிற்சிவணகில்லேன்
பாரடங்கலுமென்னுண்மைபகர்ந்திடப்பகைத்தசாபம்
நீரடங்கியநீள்வேணிநின்மலனெற்றிக்கண்ணால்
பேரடங்கிடவின்றுற்றபெற்றியேபெரிதுபோலும். (கரு)

ஆகபற்பலவேகூறியாரிடர்க்கடலின்மூழ்கிக்
கோகிலங்குலவைக்கொம்பர்குணின்முரசதிரவோதம்
பாகளவியசொற்கிள்ளைபாவியதென்றலென்னு
மோகனவையமீதின்முழுமதிநிழற்றவைகி. (கசு)

பாணவில்சுரும்புநாணிப்பசுங்கழைகுழையவாங்கி
தூணவிறோளினானுந்துணைமலர்த்தொடையைப்பூட்டி
யேணவிலெமதுமேனிக்கிலக்கமாவெய்தலோடுங்
காணவினுதற்கணாலேகடிந்திடப்பட்டான்கண்டாய். (கஎ)

பாகசாதனனேயாதிப்பண்ணவர்பயந்தேயோடச்
சாகரவனலமென்னச்சலமுறச்சண்டவாத
வேகமார்விடையிலேறிவிழைதருகாசிபுக்கே
மோகையார்மதனனம்பினுறுவலிகடிந்தேதமில்லை. (கஅ)

நீதமாரத்தலத்தினின்றியாங்கழன்றுபோந்து
சீதமார்திருவின்சையஞ்செறிந்தனஞ்சின்னாளங்கும்
வேதையாந்தணியகில்லேம்விரைந்துகாளத்திவைகி
யோதுசிற்றம்பலத்திலுறைந்தனம்பின்னரேகி. (ககூ)

பழமலைபரிந்துசெல்லும்பதவையில்பணிந்துபோற்றித்
தொழவருமெனதுமேனிதொகுமழனீங்கிற்றன்னே
யழகிதுகாணவல்லேமடைந்ததென்னென்றுநோக்க
விழுமியநதிகள்கூடும்விந்தையைக்கண்டோமாங்கு. (உ௦)

தாவறுதரளவாறுந்தணிவிலாத்தவளவாறும்
வீவறுகலைமாதென்னும்விளங்கியவாறுஞ்சேரும்
நோவறுமிடத்திற்றோய்ந்தநோன்மைசால்வளியெம்மேனி
தாவுறத்தாபமெல்லாந்தணிந்தனவென்றுகொண்டு. (உக)

விண்வழிவிரைந்துசெல்லும்விடையினைநிறுவியங்கண்
தண்வழிநதிகடோயுந்தக்கிணதீரந்தங்கி
மண்வழியுயிர்களெல்லாமல்குமாண்பதத்திலேற
வெண்வழிஞானசத்தியெழிற்பராசத்தியோடும். (௨௨)

அருள்புரிஞான்றுநந்தியஞ்சலிக்கரத்தினோடுந்
தெருள்புரிசிந்தையோர்கடெரித்தருணூறப்பாம
னருள்புரிசகடமென்னவேவாய்விலஞ்செழுத்துமுன்னி
யிருள்புரிபவங்கண்மாயவினையதோத்திரங்கள்செய்வான். (௨௩)

மாசறுமாறையோருள்ளமலர்மிசையேகுநின்றன்
றேசுறமலருஞ்செய்யதிருவடிப்போதுபோற்றி
பாசுறுகூந்தற்செவ்வாய்பைங்கொடிபங்கில்வைகு
மேசறுபாகம்பூண்டவெழிற்றிருமேனிபோற்றி. (௨௪)

மதிமலிவேணிபோற்றிமான்மழுக்கரங்கள்போற்றி
கதிமலிகண்கள்போற்றிகாதினிற்குழைகள்போற்றி
துதிமலியேறுபோற்றிதும்பியினதளும்போற்றி
கொதிமலியரவம்போற்றிகொல்விடக்கண்டம்போற்றி. (௨௫)

வேறு.

இன்னணங்குறித்திறைஞ்சிடுநந்தியையெடுத்து
நன்னராகுகநவிலுதிவிழைவெவனென
முன்னுமிந்நதிபுவப்பொடும்படிந்துனேபோதும்
பின்னமற்றவர்பீழைகளியாவையும்பிளிற, (௨௬)

காவியேநிகர்கண்ணருட்சத்திகளோடுந்
தூவியன்னங்கடுணையொடுந்துலங்குறுங்கமல
வாவியந்துறைவண்பதியீண்டுநீவரங்கண்
மேவியீந்திடல்விழைந்தனனடியனேன்மிகவே. (௨௭)

என்றுகூறியநந்தியினிதயமேகுளிர
நன்றுவேண்டினைநல்குதுமங்ஙனமென்றுத்
துன்றுமன்னவன்றுறுசுவறுணைவொடுந்தோன்றி
யொன்றுமாதவமோங்குமிக்கயிலையினுற்றும். (௨௮)

அல்லியங்கடியலர்மிசைவாழ்தருமயனே
புல்லியப்பதிபுகுந்தியாம்போந்தநாடொட்டே
யல்லல்வெவ்வினையகழ்ந்தணுகுறறவர்தமக்கு
நல்லயாவையுநல்கிடுநவிலுமப்பதியே. (உகூ)

யாமுறத்தகுந்தலமதற்கிணையிலைவேறு
நீமனத்துடன்சென்றவணெறியபல்யாகந்
தோமகன்றிடத்தொடங்குதிதோன்றவங்கணைந்து
வாமநல்லருள்வழங்குதும்வாழ்த்திடப்பலரும். (௩0)

எந்தையின்னணமியம்புறச்செவிதொறுமமுதம்
நந்தவார்ந்தெனக்கேட்டானல்லருள்வியந்தே
புந்தியார்ந்திடப்போயினன்பூமிசைப்புலவன்
கந்தவண்பதியன்னதைக்காண்குறக்கடிதே. (௩க)

அரந்தைநீங்கியவருண்முனிவியாதனுமறைந்த
திருந்துமிக்கதைதெரித்தனன்தெளிமினேமற்றும்
விரிந்தவேணியில்வெண்பிறைசூடியவிமலன்
பொருந்துமாநடம்புந்தியானுமைக்குதும்புகல. (௩உ)

நந்திவரம்பெறுபடலம் முற்றும்.

ஆகப்படலம் எ-க்குச் செய்யுள். ௩௩உ

அ. திருநிருத்தனப் படலம்.

உள்ளியவழுக்காறுதியுற்றிடாதறஞ்செய்மேலோர்
தெள்ளியமனத்தின்ஞானதீபமாய்விளங்குந்தேவ
ஞெள்ளியவருளைமுன்னியுற்றவஞ்சிறைப்புள்ளூர்ந்தே
விள்ளியவேதன்கண்ணாலியன்றிரிவேணிகண்டான். (க)

தத்தலைகூடுமாற்றின்றக்கிணக்கரையின்மேலால்
முத்தலைச்சூலங்கொண்டமுன்னவன்கோயிலோங்கு
மத்தலைநகருங்கண்டானன்னதின்சிறப்பையாரே
யித்தலையுலகினுள்ளேயியம்புதற்குரியநீரார். (௨)

வேறு.

ஏத்துஞானிகளிதயமேயெனநனிகுளிர்ந்து
சீத்தன்மார்பகச்செம்மலைச்சிவணியெவ்வுயிர்க்கு
மாத்தவன்பொருளளித்தளவிடப்படாதகன்ற
தீர்த்தவேணியாற்றிகழ்ந்திடுந்திருநகரத்தே. (௩)

பாணிபங்கயன்படைத்தபன்னான்கெனுமுலகி
லேணியிவ்வுலகில்லெனிலில்லையெவ்வுலகும்
பேணினார்க்குறும்பெருவளமுடையவிந்நகரம்
நாணியில்லெனினானிலமென்பதுமிலையே. (௪)

தெய்வக்கற்பினார்தெளிந்தருள்காப்பியபோலும்
வைவகற்றியவளமெலாம்வழங்குமப்பதியை
யையகத்திடும்பணமிசைப்பதித்தபார்மடந்தை
யுய்வகத்துறுமுயிர்நிலையென்பதேபுணர்வு. (௫)

புறத்துமாகடல்புகுந்துவர்ப்புணரியைத்தள்ளி
யிறுத்ததாமெனவெறிந்திடுமிலகுபேரகழி
கறுத்துநேமிமால்வரையங்குக்கடிதினிலூற்று
பொறுத்துமியாமெனப்புணர்ந்ததைப்போன்றதப்புரிசை.

கருக்குவித்திடுங்கம்மியன்கைவலங்காட்ட
உருக்குவிண்ணினையுயர்நகராக்கிடவதுதா
னிருக்கவின்றிடமென்றிழிந்தின்னிலம்போந்து
தருக்கினோங்கியதென்னலாந்தகவுடைநகரம். (௭)

ஆசுகம்பொழியம்மதிற்புழைதொறுமணுகி
வீசுகாற்றுருவிளிந்ததென்றுணரத்திடல்விதியே
நேசமற்றவர்நினைவையுங்கடந்திடுநெடிய
கோசமுற்றியகொட்பினையாவரேகுணிப்பார். (௮)

தங்குலப்பழிதாங்குவான்றருக்கொடுமெகின
மிங்கணுள்ளனவிரைத்திறைமுடிமற்றுநேடி
யங்கண்வானத்திலலமரல்கடுப்பனவகப்பா
பொங்குவெண்கொடிபுரையறப்போகியபொலிவு. (௯)

புதுக்குமாமணிப்பொலன்செய்தபித்திகைதோறுஞ்
செதுக்குமோவியஞ்சிவணியவத்திறஞ்செறிந்து
அதுக்கிவானவரடியொடுமகழ்ந்துபோயகல்வான்
பதிக்குமென்றிவர்பான்மையேபோன்றனபடிவம். (௧௦)

கானிலம்படாக்கடவுளர்கதிவிழைவுற்றுத்
தானிலங்கியதனிமுதற்றண்ணருள்பெறுவான்
வானிலந்தொடுவழியெனவைகலும்வரவே
மேனிலம்பலமிடைவனகோபுரமிளிரும். (௧௧)

ஆடகத்தினாலாக்கியமண்டபமகல்வான்
மோடுமுற்றியகூடெனமுன்னலாந்தகைய
நாடகத்தியனம்பனாலயம்நவிலச்
சேடனத்தியசெறிபலநாவினுஞ்சிவணா. (௧௨)

சுற்றுநேமியந்தேர்நலஞ்சொற்றிடினுலகில்
கற்றதன்பெருமாண்பெலாங்கடவுளர்தச்சன்
முற்றக்காட்டுவான்செய்ததுகடுத்திடுமுன்னின்
பொற்றமேருவும்புறந்தரும்பொலிவினதம்ம. (௧௩)

ஆடுகேதனத்தறஞ்சொலுமாளிகையகல்வா
னாடுபோதலாலுவணையருளங்கொதிப்பேறி
பாடுமுற்றியபதமினிப்பாருளோர்க்கன்றி
யேடுமுற்றுறவெழுதினுமெமக்கிலையென்பார். (௧௪)

வாசநீளகன்பொதும்பரில்வானமங்கையர்க
டேசுலாமலர்தெருண்டனவெடுத்திடக்கண்டு
வாசவன்வனகற்பகம்வறுமலருடையேம்
பேசலென்புவிபிறத்தலேபெருமையென்றுன்னும். (௧௫)

அண்டர்தானவ ரருந்தவர்சித்தர்களென்னக்
கொண்டதெய்வதவுலகினர்யாவருங்குறித்துத்
தண்டலின்றியே தனித்தனியிருந்திடத்தக்க
பண்டமைத்திடுமிடம்பலபாங்குறவிளங்கும். (௧௬)

துண்டமத்தியிற்றுணைவிழிதுதிமுறையிருத்திக்
குண்டிகையருகிருந்திடக்காலெதிர்தூண்டி
யண்டர்நாயகனடியிணையகத்தினிலடக்கி
மண்டுமாதவம்புரிகுநர்மாளிகைபலவே. (௧௭)

ஆதிநான்மறையந்தணராசறுகாட்சி
சேதியாவுயிர்தன்னினுஞ்சிறப்புறவோம்பும்
நீதிநல்லொழுக்கத்தினர்நிறைகுணச்செல்வர்
வீதிமல்கியமாளிகைவிண்டலமவிழுங்கும். (௧௮)

பாவுபல்படையாள்பவர்பரிதியின்மதியின்
மேவுமங்கியின்குலத்தினர்மிளிர்புகழாளர்
தாவுநன்னெறிதப்பிடார்தறுகணாண்மையினர்
காவலோம்புநர்பவனமங்களப்பிலகாணின். (௧௯)

விடைவழுக்குறார்வினவியவில்லெனின்வேறே
யடையுமற்றதனினஞ்சொலியார்வமேகிளந்து
மிடைஇயவாணிபமேதினிமகிழ்ந்திடப்புரியு
மிடையருங்குலவெட்டியரிருக்கையெண்ணிலவே. (௨௰)

தனக்குமுந்தியதகைவருங்குலத்தினர்மூவர்
வினைக்கணின்றிடவீற்றுவீற்றவர்தமையோம்புங்
கனைக்குமேதியோர்கடவுறுமேழியஞ்செல்வர்
நினைக்கும்வாழ்மனைநிகமமங்கணிபெறநெருங்கும். (௨௧)

உலகுதாங்குறுமேனையமரபுடையுரவோர்
கலைகள்வேண்டியகற்றிடுகாட்சியராகி
துலையவாவியசொல்லொடுந்துகளறுதங்க
ணிலையகன்றிடார்நெடுந்தெருவெண்ணிலநிலவும். (௨௨)

நஞ்சயின் றருணு தனல்லடியவர்நண்ணி
விஞ்சுறும்பசிவெம்மையையாற்றுவான்விரும்பி
யெஞ்சலின்றியேபோனகஞ்சுவையுறவியற்றும்
மஞ்சுதங்குறுமாடங்கள்பற்பலமன்னும். (௨௩)

பாவணங்கெரிபண்பினர்பரிந்தனருரைக்க
நாவணங்குறுநானிலவளங்களுநனியு
மாவணம்பலமிடைவனவவ்வியனகல்வண்
காவணங்குறுசாலைகள்கலிகடிந்திடுவ. (௨௪)

தேவநாயகன் றிருவடிக்கேற்றியபனுவன்
மூவர்பாடியதமிழ்மறைமுறைமுறையாக
வாவலோடகம்பணித்திடவத்யயனஞ்செய்
கோவையார்நிலையங்களைக்குணிப்பரிதம்ம. (௨௫)

பத்திசெய்மணிப்பாயிருட்படலத்தைதவிழுங்கும்
பொத்துமின்னிசைபொதுளியவரமியதலத்தி
லொத்தமாமுரசொலிகெழுமாடலம்பலத்திற்
பைத்தமாமுகில்படக்கொடியாடுவபண்பே. (௨௬)

வாமமஞ்சரிவண்டடிவைகியபந்த
ரோமமுந்திடவுயர்மணம்புரிகுநரொல்காச்
சேமமல்கியவாச்சியஞ்சிலம்பிடச்செறியு
நாமநல்விழாநாடொறுமருந்தனநகரம். (௨௭)

வேறு.

வெண்ணிலாச்சொரிதருவிழைபுமாடமேற்
றண்ணிலாத்தவழ்தரத்தாரமென்றெணி
நண்ணுதங்கணவரைநாணமீக்கொள
வொண்ணுதலார்கரமோச்சியார்ப்பரால். (௨௮)

பதுங்குதங்கணவரின்பகருமின்னெழி
லதுங்குறுவாடியிலவிரவவ்வுழை
செதுங்கிடாத்தன்னுருசெறியத்தேரிலா
வொதுங்குறுமயிலனுருடனோங்குவார். (௨௯)

நடைவழுக்குறுதவர்நாடிச்செல்குறத்
தடையறவவர்தமைத்தாங்குமில்லறம்
விடையனூர்விளங்கிழையார்கடம்மொடு
மடையுநல்லின்பெலாமவிரவாற்றுவார். (௯0)

பிணங்கிடப்பிடியனூர்பெருகுகாதலி
னணங்குறுமாடவரமிழ்தம்பெய்தென
விணங்குதம்மகவினதினியசொல்லினால்
வணங்கெடனீங்குவார்வைகறோறுமே. (௯க)

அஞ்சனவிழியினாரரம்பைமார்களை
விஞ்சைகொளமாரேவீரமைந்தர்கள்
மஞ்சடைமலைபுரைதோளைமாறினர்
கஞ்சமென்முலையினைக்காணுந்தன்மையால். (௯உ)

இன்னபல்வளங்களானியன்மிக்கந்நகர்
நன்னதியாமியக்கரையினுகமை
பொன்னடைவடநிழல்பொலியத்தோன்றிடுங்
கன்னியோர்பாகனைக்கருத்திலுன்னியே. (௯௩)

போறியடக்கியதவம்புணர்ந்துநான்முக
னறிவருகாலநன்காற்றிப்பின்னரு
நெறியுடையிட்டியுநிகழ்த்தநீத்திடு
மறிவுடையாளரையகத்திலெண்ணினான். (௯ச)

எத்தகையுலகினுமெண்ணுங்கற்பினுக்
கத்தகையுடையளென்றறிந்தியாவர்க்கு
மொத்தனருரைத்திடவுவமையாக்கொளு
முத்தமீனுடையொருவனுதியா. (௯ரு)

உண்ணலமேவியவுயர்தவத்தரா
மெண்ணறுமுனிவர்களீண்டவெவ்வமில்
கண்ணுறுமணிபலகாலுங்கண்ணகன்
புண்ணியநதிதனிற்புகலத்தேய்ந்தனன். (௯௬)

விடைப்பெயர்த்தேவனால்வேண்டிப்பூசைசெ
யடைக்கவினாலடியமர்ந்ததேவனை
யுடைப்பலமலர்கொடங்தூய்யப்போற்றியே
யிடைப்படார்நீங்கினனெனினவூர்தியே. (௩௭)

மாதவச்சாலையுமகிழ்வினாற்றினன்
கோதறுமுனிவருங்குழீஇயினார்கள்வந்
தாதரம்பெருகிடவவரையேற்றனன்
காதலினன்னருங்கருதிச்செப்புவார். (௩௮)

எங்களைக்கருதியவெந்தையேயருள்
பொங்கிடவுணர்த்திடிற்பொற்பினன்னதை
யிங்குனதருளினாலியற்றுவம்மெனப்
பங்கயனன்றெனப்பணித்தன்மேயினான். (௩௯)

மதிநதிமிலைச்சியமங்கைபங்கனற்
கதிபெறவொருமகங்கருதிச்செய்குவான்
றுதியுறுநுங்களைத்துணைக்கொண்டேனது
விதியுறமுற்றுவான்விரைமினென்றனன். (௪௰)

எழுந்தனரார்த்தனரிலங்குதாமரைச்
செழுந்தவிசுகந்திடுதேவைப்போற்றின
ரழுந்தினர்களிப்பெனுங்கடலிலாணவ
மொழிந்தனருணர்வெனவுளங்கொண்டாரரோ. (௪௧)

நாமகள்கணவனுநாகர்தச்சனை
யாமகங்கெடாதநல்லட்டவக்கிரன்
நேமநல்விதிகொடுநிகழ்த்துவாயொரு
தூமகச்சாலையைத்துலங்கவென்றனன். (௪௨)

என்றலும்பணியெனவேற்றுக்கம்மியன்
துன்றியவறிவினாற்றாயமாமுனி
யொன்றியவிதிவழியோகையோங்குற
நன்றுறவியற்றினானறெங்கணும். (௪௩)

ஆயிடையணிகலனுடையாதிய
நேயநல்லன்பினர்நெருங்கிவைகிட
மோய்வருதவத்தினரொதுங்குஞ்சாலைகள்
வாய்வுறவிழைத்தனன்வண்மைமேதக. (௪௪)

மாழையால்கதிர்விடுமணிக்கல்வேதியும்
வாழியகுண்டமும்வயங்குமாடகத்
தாழியும்யூபமுந்தகுதிப்பண்டமும்
நாழியிற்குயிற்றினனவையினீங்கிட. (௪௫)

ஆனனநான்குடையயன்பின்னருந்
தேனுவையழைத்தனன்சேறம்பலற்றிடு
போனகமமைக்கெனப்பொருக்கென்றன்னது
வானகம்வீங்குறவழங்கலாயது. (௪௬)

வேறு.

மாதிரப்புலவர்மேருவலம்வருகதிரோன்மற்றைச்
சோதிசேர்கோளுநாளுஞ்சொற்றகிம்புருடர்நாகர்
